


# சிவதொண்டன்

**எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்**

மலர் 80

துர்முகி ஙூ ஆடி - ஆவணி (2016 ஜுலை - ஆகஸ்ட்)

இதழ் 07 - 08






திருச்சிற்றம்பலம்

**மற்றொரு துணைஇனி மறுமைக்குங் காணேன்**
**வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்**
**சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்**
**துணையென்று நான் தொழப் பட்ட ஒண் சுடரை**
**முத்தியும் ஞானமும் வானவ ரறியா**
**முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்**
**கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்**
**கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.**

திருச்சிற்றம்பலம்

**பொழிப்புரை:**

சூழ்ந்துள்ள சுற்றத்தாரையும் துணையென்று நினையாது, "இவனே துணை" என்று தெளிந்து, நாள்தோறும் என்னால் வணங்கப்படுகின்ற, ஒளியையுடைய விளக்குப் போல்பவனும், வீடாவதும், ஞானமாவதும், அவற்றை அடைவிப்பனவாய் அமைந்த, தேவராலும் அறியப்படாத அளவற்ற நெறிகளாவனவும் இவை என்பதனைப் படிமுறையானே அறிவித்து மெய்ப்பொருளை எனக்கு உணர்த்தியருளிய கடவுளும் ஆகிய பெருமானை அவன் கயிலையில் வீற்றிருந்தவாறே, "திருக்கழுமலம்" என்னும் இவ்வளநகரிற் கண்டு கொண்டேன்: அதனால் முன்பு அவனை மறந்து வருந்திய யான், இனி ஒருபோதும் அவனை மறவாதிருக்கும் திருவருளைப் பெற்றேன். ஆகவே இம்மைக்கேயன்றி மறுமைக்கும் இனி மற்றொரு துணையை நாடேன்.





சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

உ
சிவமயம்

# அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 03.07.2016<br>07.08.2016<br>04.09.2016 | ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு | காலை 8.00<br>மணிமுதல் | சிவதொண்டன் நிலையம்<br>யாழ்ப்பாணம் |
| ஆயிலியம் | 07.07.2016<br>03.08.2016 | வியாழன்<br>புதன் | நண்பகல் | யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம்<br>கொழும்புத்துறை |
| | 31.08.2016 | புதன் | பிற்பகல் | செங்கலடி சிவதொண்டன் நிலையம் |

**வழமைபோல் நல்லூர் கந்தவாமி கோயில் உற்சவங்களான சப்பரத்திருவிழா (30.08.2016), தேர்த்திருவிழா (31.08.2016), தீர்த்தத் திருவிழா (01.09.2016) ஆகிய நாட்களில் நல்லூர்த் தேரடி அறுபத்துமூவர் மடத்தில் அன்னதானம் வழங்கப்படும்.**

**பொருளடக்கம்**


| விடயம் | | பக்கம் |
|---|---|---|
| 1) | நல்லூர் வீதியில் | 01 |
| 2) | திருவிளங்கதேசிகரும் அவரது உரையுடன் கூடிய திருப்புகழ்த்திரட்டும் | 02 |
| 3) | மறவாமனமும், மறவாதிருக்க மருந்தும் | 06 |
| 4) | நேயக்காரன் | 11 |
| 5) | நல்லூரான் திருவடி (ஆசிரியர்) | 17 |
| 6) | நற்சிந்தனை | 19 |
| 7) | Natchinthanai | 21 |
| 8) | Foundation stones to Happiness and Success | 22 |
| 9) | THE AMRITANUBHAVA | 25 |

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் :80 துர்முகி ௵ ஆடி - ஆவணி (2016 ஜூலை - ஆகஸ்ட்) இதழ் : 07 - 08

உ
சிவமயம்

## நல்லூர் வீதியில்

இராகம் - பிலஹரி தாளம் - ரூபகம்

பல்லவி

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே

அநுபல்லவி

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாத லாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)

சரணங்கள்

வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே (எந்நாளும்) 1

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும்நல் லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்திநிச் சயமே (எந்நாளும்) 2

நற்சிந்தனை.

# திருவிளங்கதேசிகரும் அவரது உரையுடன் கூடிய திருப்புகழ்த்திரட்டும்

## 1.0 திருவிளங்க தேசிகர்

### 1.1 தோற்றம்

திருவும் கல்வியும் சீலமும் பொலிந்து திகழும் யாழ்ப்பாணத்தின் கண்போல் விளங்குகின்ற மானிப்பாய் என்ற பகுதியிலே கி.பி. 1850 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முப்பதாம் நாளில் சைவப் பெரியார் திருவிளங்கம் பிறந்தார். அவருடைய தந்தையார் முருகேச முதலியார் ஆவார். அவருடைய தாயார் சிவகாமி அம்மையார் ஆவார். அவரது தாயார் சைவ ஆசாரம் மிகுந்த நற்புதல்வர் தமக்கு வாய்க்க வேண்டும் என்று தனது ஊரான மருதடி விநாயகப் பெருமானை நோக்கி நோன்பு இருந்து அவரைப் பெற்றார் என அப்பதியின் முதியோர் கூறுவர்.

### 1.2 கல்வி

சைவப் பெரியார் திருவிளங்கம் தமது ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று முடித்துக்கொண்டார். பள்ளிப் பருவத்திலேயே மருதடி விநாயகப் பெருமான் கோயிலுக்குச் சென்று வழிபடுவதையும் விரதம் இருப்பதையும் பயின்று கொண்டார். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலான அருட்பாடல்களை விரும்பிக் கற்பார். அவற்றில் அமைந்த பொருளை அறிதற்குப் பெரிதும் விரும்பி, தேன் உண்ணப் பூக்களை நாடிச் செல்லும் வண்டுபோல முதியோரிடமும் பிற தக்கோரிடமும் சென்று அவற்றை அறிந்து கொள்வார். அவர் அருட்பாடல்களை ஒருமுறை கற்றுக்கொண்டாராயின், அவை எளிதாக மனத்திலே பதிந்துகொள்ளும். அவர் சிறந்த நினைப்பாற்றல் உள்ளவர். இளம் பருவத்திலேயே சைவப்பற்றும், சைவ நூல்களைக் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் அவரிடம் குடிகொண்டிருந்தன.

அக்காலத்து ஆரம்பக் கல்வியில் ஆங்கில மொழித்தரமும், தமிழ் மொழித்தரமும் மிக உயர்ந்து இருந்தது. இந்தநிலை சைவப்பெரியாருக்கு மிக வாய்ப்பாக இருந்தது. அதனால் அவர் தமது ஆரம்பக் கல்வியைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்கு பயின்று கொண்டார்.

தமது புதல்வரின் கல்வித் தேர்ச்சியையும் மதிநுட்பத்தையும் கண்ட முருகேச முதலியார் உயர் கல்வி பெறும் பொருட்டுக் கொழும்பு மாநகரில் உள்ள அருண்மிகு தோமசுக் கல்லூரிக்கு எல்லா வசதியோடும் அனுப்பிவைத்தார்.

தோமசுக் கல்லூரியில் தமது உயர்கல்வியைத் திறமையாகக் கற்று முடித்தார். ஆங்கிலப் படிப்போடு செந்தமிழ் நூல்களையும் தாமே கற்றும் நல்லாசிரியர்களிடம் கேட்டும் புலமை எய்தினார். அவருடைய நல்ல இயல்புகளையும் நல்ல ஒழுக்கத்தையும் கல்வியின் ஏற்றத்தையும் கண்ட கல்லூரி அதிபர் வண. மில்லர் அவரில் மிக மதிப்பு வைத்தார்கள். பின்னர் அங்கு ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் திருவிளையாடல் புராணம், பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய சமய இலக்கியங்களையும் வடமொழியையும் பயின்று கொண்டார்.

பின்பு ஆசிரியத் தொழிலைக் கைவிட்டு வழக்கறிஞராகப் பயின்று அதில் தேர்ச்சி பெற்றார். வழக்கறிஞராக இருந்த காலத்தில் தமது எஞ்சிய நேரங்களில் சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திராவிட மாபாடியம் முதலிய சைவ சித்தாந்த நூல்களை ஆராய்ந்து கற்று வந்தார். சித்தாந்த சைவமே மேலான சமயம் என்றும், அதுவே தமக்கு விடுதலை பயக்கக்கூடியது என்றும் துணிந்து அச்சித்தாந்த சைவ நூல்களில் கூறப்பட்ட பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களின் தன்மைகளையும், இயைவுகளையும் நுணுகிக் கற்றுத் தெரிந்து கொண்டார்.

ஓய்வு நேரங்களில் சிவஞானசித்தியார் சிவ பிரகாசம் என்னும் நூல்களுக்கு முன்னோர் எழுதிய உரைகளை நன்கு ஆராயந்துகொண்டு இருப்பார்.

### 1.3 தொழில்

தோமசுக் கல்லூரியில் அவர் உயர் கல்வியை முடித்ததும் அவருடைய திறமைகளைக் கண்ட அதிபர் மில்லர் தமது கல்லூரியில் ஆசிரியராக இருக்கும் படி வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுகோளுக்கு இணங்கிச் சில ஆண்டுகள் அங்கே கற்பித்தார்.

பின்னர் வழக்கறிஞராகப் பயின்று தேர்ச்சி பெற்று கி.பி. 1888ஆம் ஆண்டிலே கொழும்பிலுள்ள நீதிமன்றங்களில் வழக்குரைத்து வருவாராயினார். அக்காலங்களில் தமது கடமையைத் திறம்படச் செய்தார். சட்ட நூல் புலமையும், நேர்மையும்

அவருடைய புகழை மிகுவித்தன. சிங்கள மக்களும், தமிழ் மக்களும் அவரை மிகவும் மதித்தார்கள்.

அதன் பின்னர் அவர் நீதிபதி ஆகப் பதவி ஏற்றார். ஆட்சியாளர் அக்காலத்தில் இலங்கைக்கு நீதிபதிகளாகப் பெரும்பாலும் ஆங்கிலேயரையே நியமித்து வந்தனர். ஆனால் சைவப் பெரியார் சிலாபத்தில் உள்ள நீதிமன்றத்துக்குத் துணைப்பொலிசு நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அவர்பால் அமைந்த தகுதியும், நடுநிலையோடு ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் சதுரப்பாடும், நேர்மையுமே அவருக்கு அப்பதவியை வழங்கின.

நீதிபதியாக இருந்து செம்மையாகக் கடமை செய்த காலத்திலும் அதன் பின்னரும் உறுதி சாதனம் எழுதும் மாணாக்கரைப் பரீட்சை செய்யும் குழுவில் ஒருவராயிருந்து நேர்மையோடு கடமை செய்தார்.

### 1.4 சமுதாய சேவை

சைவப் பெரியார் நீண்டகாலம் கொழும்பில் வாழ்ந்து எல்லாவகை மக்களோடும் நட்புப் பூண்டு வந்தமையால் கொழும்புத் திருவிளங்கம் என்று எல்லோராலும் அழைக்கப்படலானார். கொழும்பு நகர்ச் சமுதாயத்திற்கு நற்பணி செய்தலைக் குறித்துக் கொண்டு தொடர்ந்து பதினைந்து ஆண்டுகள் மாநகர சபை உறுப்பினராக இருந்தார். அக்காலத்தில் அவர் செய்த பொதுச்சேவைகள் பல ஆகும்.

தமது குடும்பத்தினர் நிறுவிய மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியிலே கண்ணும் கருத்தும் உடையவராக இருந்தார். இயக்குநர் அவையிலே தாமும் ஒருவராயிருந்து பொது வகையில் கல்வியும் சிறப்பு வகையில் சைவ ஆசாரமும் சிறந்து விளங்கும் படி தகுந்த ஆசிரியர்களை நியமித்தார். அவருடைய சொல் திறமையைக் கண்ட இயக்குநர் குழு அவரையே பரிபாலகராக இருக்கும்படி வேண்டிற்று. இரண்டு ஆண்டு காலம் அப்பதவியை விருப்பத்தோடு ஏற்றுப் பரிபாலித்தார். புலோலி நகர்ச் சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் அவர் காலத்திலே கல்லூரியில் சில மாதங்கள் துணை அதிபராக இருந்தார். ஆயிரத்துத் தொழாயிரத்து இருபத்து ஓராம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகள் அருள்திரு விபுலானந்த அடிகள் என்று பின்னர் வழங்கப் பெற்ற பண்டிதர் மயில்வாகனனார் அதிபராக இருந்தார். அதிபர் இருவரும் திருவிளங்கத்தின் கீழிருந்து கடமை செய்தல் தமக்குப் பெருமை என்று கருதிக்கொண்டனர். பண்டிதர் மயில்வாகனனார் சிறீ இராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சுவாமி சருவானந்தரோடு உண்டாய தொடர்பினாலே துறவு வாழ்வை விரும்பி அச்சங்கத்திற் சேர்வதை மனதிற் கொண்டு அதிபர் பதவியை விடுதற்குப் பலமுறை முயன்றும் பரிபாலகரின் அன்பால் பிணைப்புண்டு அவர்தம் வேண்டுகோளின்படி தமது விருப்பத்தைக் கைவிட்டுப் பெரியார் திருவடி சேரும் வரையும் அதிபராக இருந்தார்.

### 1.5 சைவப் பண்பு

திருவிளங்கதேசிகரின் முன்னோர் பல ஆண்டுகளாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அரச சேவைகளில் புகுந்து உயர்ந்த உத்தியோகங்களில் அமர்ந்து விளங்கினர். அவர்கள் சைவ ஆசாரத்திலும் தமிழ்க் கல்வியிலும் மேம்பட்டவர்கள். முருகேசு முதலியாரும் அவர் தந்தையாரும் சித்தாந்த நூலறிவும் திருமுறைப் பயிற்சியும் உடையவர்களாய் நியமந்தவறாது சிவபூசை செய்பவர்களாய் விளங்கினார்கள். பாரம்பரியமாக வந்த சைவப் பண்பு திருவிளங்க தேசிகரிலும் ஊறியமை புதுமை ஆகாது.

சைவப் பெரியார் திருவிளங்கம் நியமம் தவறாது சிவபூசை செய்து அன்றி உணவு கொள்ளாதவர். எந்நேரமும் திருநீறு விளங்கும் நெற்றியை உடையவர். கண்மணி விளங்கும் மார்பினை உடையவர். திருக்கோயில்களையும் சிவனடியார்களையும் வணங்குவதும் சிவனடியார்களுக்குத் திருவமுது ஊட்டுவதும் தமக்குக் கிடைத்த பெரும் பேறு என்று கருதுபவர். திருமுருகாற்றுப்படை, கந்தர்கலி வெண்பா, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருவாசகம், திருப்புகழ் என்பன அவருடைய பாராயண நூல்கள் ஆகும். அடங்கன் முறை, திருத்தொண்டர் புராணம் என்பவற்றைத் தமது பூசை அறையிலே பீடத்தில் வைத்தும் பட்டணிந்து மலரிட்டும் வழிபடுவது அவர் வழக்கம். சமய குரவரும், சந்தான குரவரும் திருவடி எய்திய திருநாள்களிலே தமது இல்லத்தில் குருபூசை செய்து அவர்களை வழிபடுவார். "நிலை இல்லாத உலகப் பற்றுக்களை விட்டு நிலை உள்ள திருவடிப் பற்றை வேண்டுமின்! மக்கட் பிறவியின் பயன் அதுவே" என்று தம்முடன் நெருக்கிப் பழகிய அன்பர்களுக்கு அடிக்கடி கூறி வருவார். பிற்காலத்தில் அவரைத் திருவிளங்க தேசிகர் என்றே அவரை அறிந்தோர் எல்லோரும் அழைத்து வந்தனர்.

### 1.6 நூல்களுக்கு உரை

சுத்தாத்துவித சித்தாந்த சைவத்திலே கூறிய முப்பொருள்களின் தன்மைகளையும் ஆன்ம விடுதலைக்கு உரிய சாதனங்களையும் விளக்கமாக உணர்ந்து கடைப்பிடித்து அநுபூதிச் செல்வராக நின்ற சைவப்

பெரியார் தம்மைப்போலவே மற்றையோரும் சமய விளக்கம் அடைய வேண்டும் என்று கருணை உள்ளம் கொண்டார். வழிநூலாகிய சிவஞானசித்தியாரின் சுபக்கத்துக்கும், சார்பு நூலாகிய சிவப்பிரகாசத்துக்கும் முன்னோர் எழுதிய உரைகள் இக்காலத்தவர்களுக்கு எளிதில் புலப்படா என்று கருதி எல்லார்க்கும் பயன்படுமாறு விளக்கமான உரைகளை எழுதத் தொடங்கினார். ஆசிரியராகவும், வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் இருந்தமையால் சித்தாந்தப் பொருள் கூறுகளில் வரும் சிக்கலையும், இடர்பாட்டையும் நுணுகி ஆராய்ந்து தெளிய வாய்ப்பு உண்டாயிற்று. ஆசிரியர்களாக இருந்தவர்களுக்கு இயல்பாக மாணாக்கர் இடர்படும் இடங்கள் புலப்படும். சித்தியார் உரையிலும், சிவப்பிரகாச உரையிலும் தெளிவான விளக்கங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. கருத்து ஊன்றிக் கற்போர் அவற்றைத் தாமே உணர்ந்து கொள்வர். நூல் ஆசிரியர்களின் சொற்கிடையைக் கிடந்தாங்கு வைத்து அவர் தாம் வெளிப்படுத்தக் கருதிய பொருள்களை முட்டின்றி வெளிப்படுத்தி இருக்கின்றார்.

இனி, அருணகிரிநாதர் இயற்றிய கந்தரலங்காரச் செய்யுள்களிலும், தான் திரட்டிய திருப்புகழ்ப் பாடல்களிலும் அமைந்த தத்துவப் பொருள் உண்மைகளை அவற்றிற்கு எழுதிய உரைகளில் ஆங்காங்கே விளக்கிய திறம் போற்றுவதற்கு உரியதாகும். திருவருள் பதிவினால் அவரிடம் மலர்ந்து கொண்ட உள் ஒளியே இவ்வாறு உண்மைப் பொருள்களைப் புலப்படுத்தியது என்க.

### 1.7 குடும்பம்

திருவிளங்கதேசிகரின் வாழ்க்கைத் துணைவி திருவாளர் சங்கரப்பிள்ளையின் மூத்தபுதல்வி சொர்ணாம்பாள் ஆவார். சதாசிவமும் இராமச்சந்திரனும் அவர்களுக்கு வாய்த்த அருமைப் புதல்வர்கள் ஆவர்.

### 1.8 யோக சுவாமியின் தரிசனமும் திருவருள் நோக்கும்

தார்க்கிக உணர்வு மிகுந்தவர்கள் ஒரு பொருளைத் தெளிவதற்குப் பல கோணங்களில் ஆராய்வர். சித்தாந்த நூல்களுக்கு உரை எழுதும் வழி எத்துணை ஆய்வு வேண்டப்படும். சைவப் பெரியார் தமக்கு எளிதிற் புலப்படாத பொருள்களை மனத்திலே குறித்துக் கொண்டு அவற்றைத் தெரிவிக்கத் தகுந்தவர் கொழும்புத்துறையில் உள்ள சிவயோகநாதரே ஆவாரென்று அவரிடம் செல்வர். சில சமயங்களில் அவருடைய தரிசனம் இடைவழியிலும் கிடைக்கும்; குருமணியின் ஆச்சிரமத்திலும் கிடைக்கும். யோக சுவாமியைக் கண்டதும் அவருடைய திருவருள் நோக்கத்தால் ஐயங்கள் எல்லாம் தெளிவாகிவிடும். சொல்லில் அடங்காத மகிழ்ச்சி அடைந்து தமது குருமணியை வணங்கி வீடு சென்று உரையை எழுதி நிறைவு செய்வார். இந்த நிகழ்ச்சி இடை இடையே நடைபெறுவது வழக்கம்.

குருமணியின் திருஅருள் நோக்கு, பக்குவம் எய்திய சைவப் பெரியாரின் நல் உயிரிலே ஊடுருவி நின்று உள் ஒளியைச் சுடரச்செய்த அற்புதத்தை ஆரறிவார்!

### 1.9 திருவடிப் பேறு

இரண்டு சாத்திர நூல்களுக்கும், இரண்டு தோத்திர நூல்களுக்கும் அருமை பெருமை வாய்ந்த நல் உரைகளை எழுதி சைவ உலகுக்குச் செழு நிதியமாகத் தந்த திருவிளங்கதேசிகர் கி.பி.1922 ஆம் ஆண்டு மாசி மாதம் இருபத்து இரண்டாம் நாளில் எம்பெருமான் திருவடி நிழலை அடைந்தார். இதனை உணர்ந்த குருநாதன் உடனே ஆச்சிரமத்தில் நின்றும் வெளிவந்து வானத்தை நோக்கி "அவன் சோதியுடன் கலந்து விட்டான்" என்று மணிவாய் மலர்ந்தருளினார் என்பர்.

### 1.10 திருப்புகழும் திருவிளங்க தேசிகரும்

திருவிளங்கதேசிகர் ஒரு சுப்பிரமணிய உபாசகர். முன்குறிப்பிட்டது போல அவரது நித்தியபாராயண நூல்கள் திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருப்புகழ் என்பனவே. அவருக்கு இசைப்புலமையும் உண்டு. வைகறைப் பொழுதில் எழுந்து திருப்புகழ் முதலான நூல்களில் உள்ள பாடல்களை இன்னிசையுடன் பாடுவார். அதனைக் கேட்போர் பரவசம் அடைவர். திருவிளங்க தேசிகரைப்பற்றிச் சுவாமி விபுலானந்தர் கூறியிருப்பவை பின்வருமாறு:

"திருவிளங்கம் அவர்கள் குமாரக் கடவுளைத் தியானமூர்த்தியாகக் கொண்டு ஞானானுபூதி பெற்ற மகான். பெரியார்களைக் காணவேண்டும் என்னும் பெரு விருப்பினை உடைய திருவிளங்கம் அவர்களை யான் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையிலே பரமயோகீஸ்வரராக வீற்றிருக்கும் யோகசுவாமிகளிடம் அழைத்துச் சென்றேன். இரு பெரியாருக்கும் இடையில் இவ்வுலக எல்லையைக் கடந்த பேரன்பு நிலை பெற்றது.

அன்றுமுதல் மானிப்பாய்க் கல்லூரியில் உள்ள எனது விடுதி தேவ ரூபமாக மாறியது. கொழும்பில் இருந்து திருவிளங்கம் அவர்கள் வருகின்ற நாளிலே

யோகசுவாமிகளும், நவாலியூர் தம்பையா உபாத்தியார் அவர்களும் எனது விடுதிக்கு வந்துவிடுவார்கள். இரவு முழுவதும் திருப்புகழ் பாடுகின்ற இசை கேட்போரைக் குமார லோகத்திற்குக் கொண்டு செல்லும் . இந்த அநு பூதியினைப் பூரணமாகப் பெற்ற எனது சிந்தனை மேலும் மேலும் ஆத்ம ஞான வழியினை நாடி நின்றது."

சுப்பிரமணிய உபாசகரான திருவிளங்க தேசிகர் தனது சைவசித்தாந்த விளக்கத்தோடு திருப்புகழில் தான் காணும் நுட்பமான பொருளை மற்றையோரும் அறிதல் நல்லது என்று கருதி உரையோடு கூடிய திருப்புகழ்த் திரட்டு ஒன்றை உருவாக்கினார்.

## 2.0 திருப்புகழ்த் திரட்டு

### 2.1 பதிப்புகள்

திருவிளங்க தேசிகரின் உரையோடு கூடிய திருப்புகழ்த்திரட்டு 1916 ஆம் ஆண்டு அவரால் வெளி யிடப்பெற்றது. பின்னர் அவரது மகன் இராமச்சந்திரன் 1926ஆம் ஆண்டு இரண்டாவது பதிப்பாக வெளியிட் டார். சுமார் 90 ஆண்டுகளுக்குப் பின் 2016 ஆம் ஆண்டு சிவதொண்டன் சபை தனது முதலாவது பதிப்பாக அதனை வெளியிட்டுள்ளது.

### 2.2 அமைப்பு

திருப்புகழ்த் திரட்டில் முதலாவதாக "ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே" எனத் தொடங்கும் துதிப்பாடலும், திருப்புகழ்ச் சிறப்பைக் கூறும் ஆறு பாடல்களும் இடம்பெற்றுள்ளன. திருப்புகழ்த் திரட்டில் 150 திருப்புகழ்ப் பாடல்கள் இடம்பெற்றுள் ளன. அவற்றுள் ஆரம்பமாக விநாயகர் துதிக்கு இரண்டு பாடல்கள் உண்டு. ஏனைய 148 பாடல்களும் 25 உப தலையங்கங்களுள் அமைந்துள்ளன.

திருப்புகழ்த் திரட்டில் அமைந்துள்ள இருபத் தைந்து தலையங்கங்களும் மேல்வருமாறு:

1. முருகக்கடவுள் துதி 2. அருள்வேண்டல். 3.பிரபஞ்சவெறுப்பு 4. அறிவுறுத்தல் 5. விண்ணப்பம் 6. நோயற்ற வாழ்வு 7. பரத்தையர் வெறுப்பு 9. பிறவி வேண்டாமை 10. மறுபிறப்பு 11. அந்தியகாலம் 12.திருவடிக்கு இரங்கல் 13. திருவடிக்கு அன்பு 14.சிவஞானம் 15. தெரிசனம் 16. ஞானோபதேசம் 17.பக்தி வைராக்கியம் 18. பூசை 19. அடியார் 20. சுதந்திரம் இன்மை 21. அநுபூதி 22. சிவயோகம் 23.மனோலய சமாதி 24. அத்துவிதமோனம் 25.முத்தி

### 2.3 சிறப்பு

இன்று சுமார் இருபதுக்கும் மேற்பட்ட திருப்புகழ்த் திரட்டுக்கள் பயன்பாட்டில் உள்ளன. அவற்றுள் சில உரைகளோடும் உள்ளன. இவை எல்லாவற்றிற்கும் முன்னதாக வந்தது திருவிளங்க தேசிகரது திருப்புகழ் திரட்டாகும். திருப்புகழுக்கு வந்த உரைகளுள்ளும் முதலாவதாக வந்தது திருவிளங்க தேசிகரின் உரையே. திருப்புகழ்த் திரட்டு வரலாற்றிலேயே அமைப்பைப் பொறுத்த வரையில் ஒரு சைவ சித்தாந்தப் பின்னணியை யும், ஆன்ம வளர்ச்சிப் பரிணாம முன்னேற்றத்தையும் வேறு எந்தத் திருப்புகழ்த் திரட்டிலும் இது போலக் காண முடியாது.

அதேபோல வேறு எந்த உரையிலும் காணக் கிடைக்காத சைவ சித்தாந்த நுண்பொருள்களை திரு விளங்க தேசிகரின் உரையில் காணலாம். அவருடைய அவ்வளவு சிறப்பான உரையுடன் கூடிய திருப்புகழ்த் திரட்டு வெளிவருவதைப் பயன்படுத்தி ஆன்ம சாதனை செய்வோர் நலன்பெறுவார்களாக.

### 2.4 குறிப்பு

வேறு எந்தத் திருப்புகழ்த் திரட்டிலும் காண முடியாத, ஓர் ஆன்மா படிப்படியாக முன்னேறி இறுதியில் முத்தி அடைவதை அடிப்படையாகக் கொண்டு திருவிளங்க தேசிகர் தனது உரையுடன் கூடிய திருப்புகழ்த் திரட்டை அமைத்துள்ளார். எனவே உரையில் மட்டுமன்றி அவரது திரட்டு அமைப்பு முறைக்கும் சைவ சித்தாந்த அடிப்படை உள்ளது. அவரது திருப்புகழ்த் திரட்டின் இருபத்தைந்து உப தலையங்கங்களின் பொருள்களையும், அவற்றுக் கிடையே உள்ள தொடர்பையும், அதே பாடல்களைக் கொண்டு சிந்திப்பதும், உரையின் நுட்பங்களை அவதானித்துக் கற்பதும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு அவரது திருப்புகழ்த் திரட்டை நன்கு பயின்று வருவதால் அப்பயன்கள் மட்டுமன்றித் திருப்புகழ் முழுவதையும் படிப்பதற்கு அது ஓர் ஆரம் பமாகவும், திறவு கோலாகவும் அமையும் எனலாம்.

தொடரும்

# மறவாமனமும், மறவாதிருக்க மருந்தும்

## முகவுரை

**சுந்தரமூர்த்தி சுவாமிகளது நமச்சிவாய திருப்பதிகமும், சுவாமிகளது நமச்சிவாயத் திருப்பதிகமும்.**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த மற்றுப் பற்றெனக்கின்றி எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை நம்மிற் பலரும் அறிந்திருக்கின்றனர். அப்பதிகத்திலே வரும் 'நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்ற தொடர் பலருக்குத் தாடனமாக உளது. பலரும் அறிந்த இத்தொடரைத் தக்க சாதனமாகக் கொண்டு சுவாமிகள் மறவாமனத்தின் மாண்பினை உணர்த்தத் திருவுளம் பற்றினர் போலும். அதன்பொருட்டுத் தாமும் ஒரு நமச்சிவாயத் திருப்பதிகம் அருளிச்செய்தனர். பச்சைமாமயில் எனத் தொடங்கும் அத்திருப்பதிகம் பண்ணமைதி, சொல்லமைதி என்பவற்றில் ஆரூரரின் திருப்பதிகத்தோடு இயைந்து செல்கிறது. இவ்விரு திருப்பதிகங்களையும் இணைத்துநோக்கி இறைவனை மறவாமையையும், அவ்வாறு மறவாதிருத்தற்கான மருந்தையும் அறிந்துகொள்ளுதல் இக்கட்டுரையின் நோக்கம்.

## மறவாமனம்

**நற்றவா உன்னை நான் மறக்கினும்**
**சொல்லும் நா நமச்சிவாயவே என்பதன் பொருள்:**

இவ்வாசகத்திற்கு நாம் மேற்போக்காகக் கொள்ளும் பொருள் மேல்வருவதாகும். "இறைவா நான் உன்னை அவ்வப்போது மறந்து போகின்றேன். ஆயினும் எனது நா நமச்சிவாய மந்திரத்தைத் தவறாது ஓதிக்கெண்டி ருக்கிறது" என்பது. அவ்வப்போது இறைவனை நினைத்துவிட்டு மற்றைப்போதெல்லாம் அவப்போதா கக் கழிக்கும் நாம் இவ்வாறு பொருள்கொள்வது இயல்பே. ஆயினும் சுந்தரநம்பியின் செந்தமிழ் இப் பொருள் அளவினதோ?

## I. சுந்தரர் தேவாரத்துச்சில குறிப்புகள்

**எத்தான் மறவாதே நினைக்கின்றேன்.**

நம்பிகள் தமது முதற்றேவாரத்திலே எத்தான் மறவாதே நினைக்கின்றேன் எனப்பாடுகிறார். இதன் பொருளை மற்றைய நினைவெதுவும் உன்நினைவை மறக்கச் செய்ய முடியாது. நான் கணமும் மறவாது உன்னையே நினைந்து கொண்டிருக்கிறேன் என்றவாறு கூறலாம்.

**மனத்துன்னை வைத்தாய்**

பித்தா எனும் தேவாரத்தின் இன்னொரு தொடர் மனத்துன்னை வைத்தாய் என்பது. பெருமான் மனத் துள்ளிருக்கும் போது பெருமானைச் சுந்தரநம்பியால் எவ்வாறு மறத்தலியலும்.

**மறவாமனங்காட்டி**

சுந்தரமூர்த்தி சுவாமிகளது "மீளா அடிமை"ப் பதிகத்தின் ஒரு பாடல் ஆயம் பேடை... எனத் தொடங்குகிறது. அத்திருப்பாட்டிலே மறவாமனங் காட்டி எனும் வாசகம் வருகிறது. இறைவன் சுந்தரருக்கு மறவாத மனத்தை அளித்திருக்கிறார். அம்மனம் இறைவனை எவ்வாறு மறக்கும்?

இவை போன்ற சுந்தரர் தேவாரக் குறிப்புகள் அவர் தம்மை ஆளாக்கொண்ட பெருமானைக் கணமும் மறவாதவராயிருந்தார் எனக் காட்டுகின்றன.

## II. இலக்கண வழக்கு

இலக்கண வழக்கில் 'உம்' இடைச் சொல் தரும் பொருள்களுள் எதிர்மறைப் பொருளும் ஒன்று. இப் பொருளின்படி நான் மறக்கினும் என்பதன் எதிர்மறைப் பொருள் நான் உன்னை மறக்க மாட்டேன் என்பதே யாகும். திருக்குறளில் வரும் "மறப்பினும் ஓத்துக் கொளலாகும்" என்பதற்குப் பொருள் கண்ட பரிமேலழகர் "அந்தணர் வேதம் ஓதுதலை மறத்தலாகாது" என்றே கூறினார்.

## III. சேக்கிழார் கொண்ட கருத்து

சேக்கிழார் பெருமான் மறக்கினும் என்பதற்கு 'இங்கிவர் தம்மை மறக்கவொண்ணாது' என்றே பொருள் கொண்டனர். நமச்சிவாயத் திருப்பதிகத்துப் பதிக வரலாறு கூறுமிடத்து இதனை நன்கு அழுத்திச் சொல்லியிருக்கிறார். அவர் பதிக வரலாறு கூறும் பகுதி மேல் வருமாறு:

"கொங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்
கொடுமுடிக் கோயிலின் முன் குறுகி
சங்கவெண் குழையார் உழைவலஞ் செய்து
சார்ந்தடி யிணையினில் தாழ்ந்து
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது
புனிதர் பொன் மேனியை நோக்கி
இங்கிவர் தம்மை மறக்கவொண்ணாது என்று
எழுந்த மெய்க்குறிப்பினில் எடுப்ப.

அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம
அஞ்செழுத் தறியஎப் பொழுதும்
எண்ணிய நாவே இன்சுவை பெருக
இடையறா தியம்பும் என்றிதனை
**திண்ணிய உணர்வினிற் கொள்பவர்**
மற்றுப்பற் றிலேன் எனச் செழுந்தமிழால்
**எண்ணிய அன்பிற் பிணிப்புற நவின்றார்**
நமச்சிவாயத் திருப்பதிகம்.

உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம்
**உரைத்து மெய்யுணர்வறா ஒருமை**
**நிலவிய சிந்தையுடன்** திருவருளால்
நீங்குவார்.........."

இப்பாடல்களில் வரும் தடித்த எழுத்தில் உள்ள
"இங்கிவர் தம்மை மறக்க வொண்ணாது
மெய்க்குறிப்பு
திண்ணிய உணர்வினிற் கொள்பவர்
அன்பினிற் பிணிப்புற
மெய்யுணர்வறா ஒருமை நிலவிய சிந்தை"
என்னுந் தொடர்கள் ஆழநீள நினைதற்குரியன. நம்பியின் மறக்கினும் எனும் மணியாரத்தில் ஒளிரும் மறவாமை எனும் மாண்பான ஒளியை அவர் பல்காலும் பார்த்துப் பார்த்து அனுபவித்து எடுத்தெடுத்துச் சொல்ல விழைகின்றார். மறக்கினும் என்பதில் சொற்பதங் கடந்ததோர் மெய்க்குறிப்பு உள்ளதை அவர் காண்கின்றார். அந்த மெய்க்குறிப்பு மறக்க வொண்ணாது என்பதேயாகும். அந்த மறக்க வொண்ணாமை திண்ணிய உணர்வு. அத் திண்ணிய உணர்வு இடையறா அன்பினால் பிணிக்கப்பட்டிருப்பது. அது மீளா அடிமை எனும் மெய்யுணர்வினின்றும் எழுந்தது. ஒருமை மனம் படைத்தது. இவ்வாறு வேண்டு மட்டும் பட்டை தீட்டி மறப்பினும் எனும் மணியில் மறவாமை ஒளி பிரகாசிப்பதைச் சேக்கிழாரடிகள் காட்டுகின்றார்.

சுந்தரர் தேவாரக் குறிப்புகள், இலக்கண வழக்கு, சேக்கிழாரது பதிக வரலாற்றுக் குறிப்பு என்பவற்றைக் கொண்டு மறப்பினும் என்பதன் பொருள் மறவாமை என ஒருவாறு கூறப்பட்டது. இவற்றினும் வலுவான அகச்சான்று நமச்சிவாயத் திருப்பதிகத்திலேயே உளது.

## நமச்சிவாயத் திருப்பதிகப் பொருள் மறவாமையே

**மற்றுப் பற்று எனக்கின்றி**

இதனால் இறைவனது திருவடிப்பற்றைவிட மற்றொரு பற்றும் நம்பிக்கு இருக்கவில்லை என்பது தெளிவாகிறது. மற்றைய பற்றுக்களால் அவற்றில் ஆசை ஏற்படுகிறன. ஆசையால் பலபல நினைவுகள் எழுகின்றன. இந்நினைவுகள் கதிரவனை மறைக்கும் மேக மூட்டம்போல் இறைநினைவை மறைக்கச் செய்கின்றன. இம்மறைப்பினால் மறதியுண்டாகிறது. சுந்தரநம்பியோ இம்மறதியை அதன் மூலவேரான மற்றுப்பற்றோடு அறுத்தெறிந்துவிட்டார். ஆதலால் அவருக்கு மறதி எவ்வாறு ஏற்படும்?

**நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்**

இதனால் நம்பியின் மனநினைவில் திருவடி நினைவொன்றே இருந்தமை தெளிவாகிறது. இத்தகைய ஒருமை நினைவினருக்கு மறதி எவ்வாறு வரும்? அவர் திருவடி மறவாச்சீருடையாளரேயாம்.

**(பாதமே மனம் பாவிக்கப்) பெற்றலும் பிறந்தேன்**

இதனால், திருவடி மறவாமையே நம்பியாகப் பிறந்த பிறப்பை பொருளுடையதாக்கிற்று. ஆதலால் பிறவியை அர்த்தமுள்ளதாக்கிய திருவடி நினைவை அவரால் மறத்தலியலாது.

**இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்.**

இதனால் திருவடி நினைவு இனிப் பிறவாத பெரும்பேறை அளித்தமையும் இதற்காக நம்பி பெருமைப்படுவதும் தெரிகிறது. திருவடிப்பேற்றைத் தரும் இறைநினைவை அவர் எவ்வாறு மறப்பார் அன்றியும் பிறவாத தன்மை என்பது திருவடி மறவாமை அன்றோ. ஆகவே

"மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப் பாதமே மனம்
பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை
வந்தெய்தினேன்"

என்ற இம் முதலிரு அடிகளின் திரண்டபொருள் நம்பியின் மறவாமையையே முகஞ்செய்து நிற்கின்றது என்பது முடிவாகின்றது.

**மறந்த நாள் மரணித்த நாள்**

நமச்சிவாயத் திருப்பதிகத்தின் இரண்டாம் மூன் றாம் திருப்பாட்டுக்கள் திருவடிநினைவு மறந்தநாளைக் கெட்டநாள், உணர்வழியும் நாள், உயிர் போகுநாள் உயர் பாடை மேல் காவுநாள் என்று நம்பி கருதியமையை அழுத்தி அழுத்திக் காட்டுகின்றன. ஆதலினால் அவர் மறதியைச் சவ மாக்கிப் பாடையில் காவிச்சென்று மயானத்திலே இட்டோ, புதைத்தோ, எரித்தோ நாசமாக்கிவிட்டார் என்று கருதுதலே தகும்.

**விரும்பனை விரும்பிய ஒருமை மனம்**

நமச்சிவாயத் திருப்பதிகத்தின் முதல் மூன்று திருப் பாட்டுக்களும் மனத்தின் மறதியை நாசமாக்கியதைக் காட்டின. திருக்கடைக்காப்புத் தவிர்ந்த மற்றைய ஆறு

பாட்டுக்களும் மெய்யுணர்வுறா ஒருமை நிலவிய அவர்தம் சிந்தையைக் காட்டுகின்றது. அச்சிந்தனை மேகமுட்டத்திற்கு அப்பால் ஒளிரும் கதிரவன் ஒளியைப் போன்றதொரு ஒருமைநிலவிய சிந்தனை யாகும். அந்த ஒருமை நினைவின் அடித்தளம் மீளா அடிமை என்ற மெய்யுணர்வாகும். தான் சுந்தரனான கைலாசபதியின் நிழலுரு என்பதை என்றும் மறவாத அடிமைத் திறம் உடையவராவார். சுந்தரனே தன் தந்தை. அவனே தனக்குச் சாரணன் (சரணானவன்). அவனேஅஞ்சினேன் என்று அடிசாரும் வேளையி லெல்லாம் அஞ்சல் என்றருள்பவன். அவன் அவனது நிழலான என்னை எப்போதும் விரும்புகிறான். அவ்வாறு விரும்பும் இயல்பினனாக இறைவனை விளிக்கச் சுந்தர நம்பி நல்லதோர் சுந்தரச் செந்தமிழைக் கையாளுகின்றார். மிக அரிதாக வழங்கும் சிவநாமங்க ளுள் ஒன்றான அது விரும்பன் என்பதாகும். விரும்பனை நம்பியும் அவன்தரும் விருப்புணர்வினாலே விரும்பு கிறார். ஆகவே சுந்தரர் விரும்பி நினையும் நினைவு அன்பிற் பிணிப்புற்ற நினைவு. அது இடையறாத நினைவு. மறதிக்கு இடமில்லாத நினைவு.

இப்படியாக மறவா மனத்துடன் பாடியதே சுந்தர நம்பியின் நமச்சிவாயத் திருப்பதிகம். ஆகவே அதனை ஓதும் முறையும் மறவாமனத்துடன் ஓதுவதாயிருக்க வேண்டுமன்றோ!

### சுந்தரர் நமச்சிவாயப் பதிகம்.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிறவாத தன்மைவந்
தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

இட்ட னுன்னடி ஏத்து வார்இகழ்ந் திட்ட நாள்மறந் திட்டநாள்
கெட்ட நாள்இவை என்ற லார்க்கரு தேன்கி ளர்புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்ட டிதொழு தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்ட வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர் போகும் நாள்உயர்
பாடைமேல்
காவு நாள்இவை என்ற லாற்கரு தேன்கி ளர்புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

எல்லை யில்புகழ் எம்பிரான் எந்தை தம்பி ரான்என்பொன்
மாமணி
கல்லை யுந்தி வளம்பொ ழிந்திழி காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்ல வாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி யேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள் நல்கி னாய்க்கழி
கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந் தாடு பாண்டிக்
கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

ஏடு வான்இளந் திங்கள் சூடினை என்பின் கொல்புலித்
தோலின்மேல்
ஆடு பாம்ப தரைக்க சைத்த அழக னேஅந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேட னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

விரும்பி நின்மலர்ப் பாத மேநினைந் தேன்வி னைகளும்
விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற நின்ற காவிரிக்
கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதை மார்குடைந் தாடு பாண்டிக்
கொடுமுடி
விரும்ப னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

செம்பொ னேர்சடை யாய்தி ரிபுரந் தீயெ ழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாக மமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்ப னேஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

சார ணன்தந்தை எம்பி ரான்எந்தை தம்பி ரான்எம்பொன்
மாமணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நார ணன்பிர மன்தொ ழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
கார ணாஉனை நான்ம றக்கினுஞ் சொல்லும்நா நமச்சி
வாயவே.

கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப்
பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத் தார னைப்படப்
பாம்பரை
நாண னைத்தொண்டன் ஊரன் சொல்லிவை சொல்லு
வார்க்கில்லை துன்பமே.

## மறவாதிருக்க மருந்து

சுவாமிகளது அன்பர் சிலருக்குச் சுந்தரத் தொண்டரின் நமச்சிவாயத் திருப்பதிகம் மனன மாயிருந்தது. அவர்களில் ஓரிருவர் சுவாமிகளது திருமுன்னிலையிலமர்ந்து அத்திருப்பதிகத்துத் திருப்பாட்டுக்கள் சிலவற்றைப் பண்முறை தவறாது பாடவுஞ் செய்தனர். ஆயினும் அவர்களது நா இனிக்கச் சொன்னது போன்று மனம் நினைந்துருகுவதாயிருக்கவில்லை. மனத்தில் மறதி இருந்தது. மறதிக்குக் கரணமான மற்றுப் பற்றுக்கள் எத்தனையோ அவர்களுக்கிருந்தன. அவர்களால் "பாதமே மனம் பாவித்தேன்" என்று தேற்றப் பொருளில் பாடமுடியவில்லை. ஏனெனில் அவர்களது மனம் எத்தனையோ வீண்பாவனை களிடையே திருப்பாதத்தை ஒரொரு போதே பாவனை செய்யப் பழக்கப்பட்டிருந்தது. "மறக்கினும்" என்பதன் மெய்க் குறிப்பு 'இங்கிவர் தம்மை மறக்க வொண்ணாது' என்று சேக்கிழார் உணர்ந்து கொண்டது போல அவ்வடியவர்களால் உணர்தல் அரிதே. 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன்' என்ற ஆரூரர் நினைவு எல்லார்க்கும் அமைதல் எளிதானதோ! மறதிக்குக் காரணமான எத்தனையோ எண்ணங்கள் அவர்கள் மனதிற் குடி கொண்டிருந்தன. எங்கள் சுவாமிகளுக்கோ 'இங்கிவர்தம்மை மறக்கவொண்ணாது' என்பது சுவானுபவத் தெளிவாயிருப்பது.

"நமது உயிருக்கு உயிராக இருப்பவர் கடவுளே
ஆதலால் நாம் அவரது அடிமை
அவரது உடைமை
நமது அசைவெல்லாம் அவரது அசைவே
**நம்மால் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது"**

என்ற குருநாதன் அருள் வாசகத்தின் முடிவான வாசகமும் "இங்கிவர் தம்மை மறக்க வொண்ணாது" என்ற சேக்கிழாரின் நமச்சிவாயத் திருப்பதிகப் பிழிவும் ஒரே குறியையே தொட்டுநிற்கின்றன அல்லவா? மறவாதே நினைக்கின்றேன் என்ற சுந்தரர் செந்தமிழும் "மறவாதவன்" என்று சுவாமிகள் தமது திருமுகங்கள் சிலவற்றுக்கு இட்ட கையெழுத்தும் ஒரே அனுபவ ஞானமே. ஆத லால் தமது அன்பாளர்கள் நாவினிக்கப் பாடுவதுபோல் சித்தத்துள் தித்தித்தும் இருக்க வேண்டும் என நாடினார். ஆதலால் நல்ல நினைவையே தாம் அருளிச் செய்த நமச்சிவாயத் திருப்பதிகத்தில் வலியுறுத்தினார்.

அத்திருப்பதிகத்திலே மறதிநோய்க்கான மூல காரணம், மறதிநோயின் குணங்கள், நோய்க்கான மருந்து, மருந்தருந்துமிடத்துச் சேர்க்கவேண்டிய அநுபானம் ஆதியவற்றைக் கூறியிருக்கிறார்.

### மறதிக்கான மூலகாரணம்

மறதிக்கான மூலகாரணம் மற்றுப்பற்றேயாகும். மற்றுப்பற்றினால் மற்றைப் பொருட்களில் ஆசை உண்டாகிறது. ஆசை அளவு மீறி இச்சையாக ஈனமடைகிறது. ஈனத்தனமான இச்சையால் இந்திரியங்கள் வரம்புகடந்து இழுத்துச் செல்கின்றன. இது திருவடி பற்றுக்கும், திருவடி சார்வதற்கும் மாறானவழி. இதனால் இடர்க்கடலுள் அழுந்த வேண்டி ஏற்படுகிறது. இந்தப் புலன்களை வெல்ல வழி அறியாது மயங்கிக் கிடக்கிறோம். இந்த இடர்பாட்டி னாலும், மயக்கத்தினாலும் திருவடி நினைவில் மறதி ஏற்படுகிறது.

### மறதி நோயின் குணங்கள்

மறதியினாலே நல்லோர் சகவாசத்தை விட்டு கொச்சை மக்களைக் கூடித் திரியவேண்டி நேரிடுகிறது. அழுக்காறு, அவா, வெகுளி என்னும் மனமாசுகள் பெருகுகின்றன. நயமற்றவர் பேசுதல், நல்லவார்த்தையொன்றும் உரையாமை ஆகிய சிறுமைகள் தோன்றுகின்றன.

### மறதிக்கான மருந்து

மறதிநோய்க்கான காரணம் மற்றுப்பற்றாதலால் அந்த மற்றுப்பற்று அறுவதற்குத் திருவடி ஒன்றையே நினைத்திருத்தலே நன்மருந்தாகும்.

### மருந்துக்கு அநுபானமாயமைவன

அடியாருறவு, ஆலயந்தொழுதல், தொழும்போது மெய்யன்பினால் மெய்விதிர்த்தல் முதலாய பக்திக் கைங்கரியங்களுக்கு ஆளாதல். மூலமந்திர மோதிடல், முத்தி சேர்ந்திட நச்சிடல் ஆகியன அநுபான மாய மைதற் குரியன.

இந்த மூலகாரணம் முதலாய நான்கையும் குழைத்து இரண்டாம் பாட்டு முதல் ஏழாம் பாட்டு வரையான அறுபாடல்களில் சுவாமிகள் அருளிச் செய்துள்ளார். இவற்றால் மறதியின் நீங்கிய மனம் ஒருமைமனத்துடன் இறுதி மூன்று பாடல்களையும் ஓதுகிறது. இம் மூன்று பாடல்களும் சுந்தர நம்பியின் நமச்சிவாயத் திருப்பதிகத் திருப்பாட்டுக்கள் போன்று விரும்பனை விரும்பிய ஒருமை மனத்திலெழுந்த பாடல்களாயிருக்கின்றன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த நமச்சிவாய திருப்பதிகத்தையும் சுவாமிகள் அருளிச் செய்த நமச்சிவாய திருப்பதிகத்தையும் சுவாமிகளது தெளிவான இன்னிசையில் சொல்லாமற் சொன்ன வழிப்படுத்தல்களின் வழியின் நின்று ஓதி நமது சிந்தனையை நற்சிந்தனையாக்க முயல்வோம்.

## சுவாமிகளது நமச்சிவாய பதிகம்

பச்சைமாமயி லோடுபூங்குயில் பாட்டறாவின வண்டுகள்
மொச்சுபூம்பொழில் முளரிசேர்பொய்கை மோதியாறுகள் பாய்ந்திட
வைச்சமாநிதி யிருமருங்கும் வயங்கிலங்கை வளநகர்
அச்சனேயுனை நான்மறக்கினும் அறையுநா நமச்சிவாயவே. 1

இச்சையானவை செய்துபூமியில் இடர்க்கடலுள் அழுந்திநான்
பச்சைமேனியன் பரவுபூங்கழல் பாடியாட மறந்திட்டேன்
கொச்சைமக்களைக் கூடியேபல கொடுமையானவை செய்திட்டேன்
நச்சைவாவுனை நான்மறக்கினும் நவிலுநா நமச்சிவாயவே. 2

காலைவேளை எழுந்திடேன்நல்ல கடிகொள்மாமலர் பறித்திடேன்
ஆலயந்தொழு தேத்திடேன்நல்ல அடியார்தங்களைப் போற்றிடேன்
மூலமந்திர மோதிடேன்நல்ல முத்திபெற்றிட நச்சிடேன்
ஆலவாவுனை நான்மறக்கினும் அரற்றுநா நமச்சிவாயவே. 3

அஞ்செழுத்தை வழுத்திடேன்கெட்ட அவாவழுக்கா றறுத்திடேன்
கொஞ்சமேனுமென் நெஞ்சிலன்பு கொள்கிலேனஞ்சை வெல்கிலேன்
துஞ்சவேவந்து தோன்றினேனொரு துணையுங்காண்கிலேன் தெய்வமே
வஞ்சனேனுனை நான்மறக்கினும் வழுத்துநா நமச்சிவாயவே. 4

பொய்யைமெய்யென நம்புவேன் புறங்கூறுவேன் புலாலுண்ணுவேன்
நையமற்றவர் பேசுவேன்நல்ல வார்த்தையொன்று முரைத்திடேன்
உய்யவேவழி ஒன்றுங்காண்கிலேன் உதவிதந்தெனை யாளுவாய்
தெய்வமேயுனை நான்மறக்கினுஞ் செப்புநா நமச்சிவாயவே. 5

மெய்யரும்பி விதிர்விதிர்க்கிலேன் மேல்விளைவ தறிகிலேன்
கைதொழுதுநின் பாதபங்கயம் கசிந்துநான்தினம் தொழுகிலேன்
பொய்யனேன்மலக் கூடுகாத்துப் புலம்பியேதிரி கின்றனன்
ஐயனேயுனை நான்மறக்கினும் அறையுநா நமச்சிவாயவே 6

ஆறுதல் பெற அடியர்பாற்சென் றவர்பணிவிடை ஆற்றிலேன்
மாறுகொள்புலன் வழியிற்சென்று மயங்கினேன் மயங்காமலே
தேறுதல்தர என்னிடம்வரச் சித்தமில்லையோ தெய்வமே
கூறனேயுமை நான்மறக்கினுங் கூறுநா நமச்சிவாயவே. 7

அப்பர் சுந்தரர் மாணிக்கர்தமக் கருளருளிய அத்தனே
முப்புரமெரி செய்தமூர்த்தியே மூவர்போற்றும் முதல்வனே
ஒப்பிலாதவொ ருவனேயுமை பாகனேயுறு துணைவனே
அப்பனேயுனை நான்மறக்கினு மரற்றுநா நமச்சிவாயவே. 8

ஓடுகங்கை யுடன்மதிகொன்றை யுரகம் வைத்த சடையனே
பாடுவார்பசி நோய்வறுமை பகைத்திடாவண்ணம் அருள் செய்வாய்
தேடுவார்தங்கள் இதயமாமலர் தினமும்வாழ்ந்திடு தெய்வமே
நாடினேனுனை நான்மறக்கினும் நவிலுநா நமச்சிவாயவே. 9

பாலன்மார்க்கண்டன் பரிந்துவேண்டிடப்பாய்ந்து வந்திட்ட கூற்றன்தன்
காலனேகொடுங் காமன்மேனி தழலெழச் செய்த கர்த்தனே
மாலயன் முன்னர் மாப்பெருஞ்சோதி வடிவமாய்நின்ற மறையவா
ஞாலனேயுனை நான்மறக்கினும் நவிலுநா நமச்சிவாயவே. 10

# நேயக்காரன்

## 1. அறிமுகம்

நேயக்கார என்ற வார்த்தை அருணகிரிநாத சுவாமிகளுடைய "முந்து தமிழ் மாலை" எனத் தொடங்கும் திருப்புகழ்பாடலில் வருவதை முருகப் பெருமானின் அடியவர்கள் பலரும் அறிவார்கள். முருகப்பெருமான் யாருக்கு நேயக்காரன் என்பதை "முடிமேலே அஞ்சலி செய்வார்கள் நேயக்கார" என்ற அந்தத் திருப்புகழின் அடியில் அருணகிரிநாதர் தெளிவாக விளக்கி உள்ளார்.

தணிகைமணி வ.சு.செங்கல்வராயபிள்ளை அவர்கள் அத்திருப்புகழ் அடிக்கு "முடிமேலே கைகூப்பித் தொழும் அடியார்களிடம் அன்பு பூண்டுள்ளவனே!" என உரைவிளக்கம் செய்துள்ளார். எனினும் அவ்வுரையில் கை என்பதற்கான வார்த்தை மூலத்தில் இல்லாததனால் தானே அதனைச் சந்தர்ப்பம் கருதி வருவித்தமையை உணர்த்த அடைப்புக்குறிக்குள் தந்துள்ளார்.

அதே திருப்புகழ் அடிக்குத் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் "சென்னியின் மேற் கரங்களைக் குவித்து வணங்குகின்ற அடியவர்களுக்கு சிநேகிதராக விளங்குபவரே" என உரை விளக்கம் செய்துள்ளார். அவரது உரையிலும் கை என்ற சொல் வருவித்து உரைக்கப்பட்டபோதும் அதுபற்றி அவர் குறிப்பேதும் தரவில்லை.

இவ்விடத்தில் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் சுவாமிமலைப் பகுதியில் "உச்சிக் கூப்பிய கையினர்" என்று 'கை' என்ற வார்த்தையைச் சேர்த்தே பாடியுள்ளார். எனவே கை என்ற வார்த்தையைச் சேர்த்துக் கூறிய திருமுருகாற்றுப்படை அடிக்கும், அப்படிக் கூறாத திருப்புகழ் அடிக்கும் ஒரே வகையில் பொருள் கொள்வது பொருத்தமில்லை என்றே தோன்றுகிறது.

ஆரம்ப நிலையிலுள்ள ஆன்மிக சாதகர்களுக்கு அவ்விருவரதும் உரைவிளக்கமும் போதியது என்பது உண்மையே. திருப்புகழும், அதன் உரை விளக்கமும் எல்லோரையும் சென்றடைய வேண்டும் என்ற குறிக்கோளினால் அவர்கள் தமது உரைவிளக்கத்தை அவ்வளவில் நிறுத்தி விட்டனர் போலும். எனவே அப்பெரியார்களின் தோள்களின் மேலே நின்று அத்திருப்புகழ் அடியை நன்றாக நோக்கிப் புதியதோர் காட்சியைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## 2. திருவாசகத்தில் சிரம் குவிவார்

திருவாசகத்தின் முதலாவது பாடலான சிவபுராணத்தில் "சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க" என ஓர் அடி வருகின்றது. திருவாசகத்தில் இந்த அடியில் வரும் "சிரம் குவிவார்" என்ற தொடரும் திருப்புகழில் வரும் "தலைமேலே அஞ்சலி செய்வார்கள்" என்ற தொடரும் ஒரே விதமான கருத்திலேயே அமைந்திருக்கின்றன. சிரம்குவிவார் என்ற திருவாசகத் தொடருக்கு உரை எழுதிய எல்லா உரையாசிரியர்களும் "தலைமேல் கைகளைக் குவித்து வணங்குபவர்கள்" என்னும் பொருளையே தந்துள்ளனர். திருவாசகத்திலும், திருப்புகழிலும் வந்த அந்த இரண்டு தொடர்களிலும் "கை" என்ற வார்த்தை உரைகளில் வருவித்து உரைக்கப்படுகின்றதே அன்றி மூலங்களில் அதற்கு ஆதாரம் இல்லை என்பது ஞாபகத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

எனினும் திருவாசகத்தின் முதல் நான்கு அகவல்களுக்கும் உரை எழுதியவர்களுள் ஒருவரான சிவயோகி இரத்தினசபாபதிப்பிள்ளை அவர்கள் மூலத்தில் ஆதாரம் இல்லாத 'கை' என்ற சொல்லை வருவிக்காமலே அந்த "சிரங்குவிவார்" என்ற தொடருக்கு உரை விளக்கம் செய்துள்ளார். திருப்புகழில் "முடிமேலே அஞ்சலி செய்வார்கள் நேயக்கார" என்ற அடியைச் சிந்திப்பவர்கள் அவரது திருவாசக உரையினைக் கருத்தில் கொள்வது பொருத்தமானதாக இருக்கும் எனத் தோன்றுகிறது. அவர் அத்தொடருக்குத் தரும் உரைவிளக்கம் மேல் வருமாறு:

"சிரம் குவிதல்" என்பதற்குச் சிந்தனையால் வழிபடல் என்று பொருள். இங்கு சிவ ஒளியைக் கண்டு அதிலே தியானித்திருத்தலே சிரங்குவிதலாகும். அவ்விதம் இருப்பின் சிவம் தனது வருகையை நாதத்தால் உணர்த்தும். இந்த நாதமே தியானப் பொருளாவதில் நாதாந்தம் என்ற சமாதியை அடைவர். இதனை ஆகாய சம்பமம் அல்லது நாத சம்பமம் என்பர். சாதகனுக்கு மனவெளியில் ஒளியின் பெருக்கமோ, நாதமோ கிட்டுவதைப் 'பாத தரிசனம்' என்பர். ஒளி ஞானமோ ஒலி ஞானமோ பெற்றவரை சிவம் ஓங்குவிக்கும். இதனாலேதான் மணிவாசகர் 'சிரங்குவிவார்

ஓங்குவிக்கும்' என்றார். இதனை அருள்வழி நிற்றல் என்று கூறுவர்.

இந்தத் திருவாசகத்தொடரின் உரைவிளக்கத்தைத் திருப்புகழ் அடியான "முடிமேலே அஞ்சலி செய் வார்கள் நேயக்கார" என்பதற்கும் பொருத்திச் சிந்திப்பது உபயோகமாக அமையும்.

**3. நேயம்**

நேயம் என்ற வார்த்தைக்குத் தமிழில் ஒத்த கருத்துள்ள சொற்கள் அநேகம் உண்டு. இங்கு மதுரைத் தமிழ்பேரகராதி நேயம் என்ற சொல்லுக்குத் தரும் வேறு சொற்களை முதலில் அவதானிப்போம். அவையாவன: " அன்பு, எண்ணெய், நன்மை, நிலப்பனை, நெய், உறவு, நேசம், சத்து,ஈரம், நெய்ப்பு, பளபளப்பு, எண்ணெய்ப் பதம்" என்பன ஆகும். இவற்றைத் தவிர வாரம், நட்பு, தோழமை, சிநேகிதம் முதலான வேறு சொற்களும் தமிழில் வழக்கில் உள்ளதை நாம் அறிவோம்.

எனவே நேயக்காரன் என்ற வார்த்தை அன்பு செய்பவன், நன்மை செய்பவன், உறவுக்காரன், ஈரம் உள்ளவன், தோழமை கொண்டவன், சிநேகிதன், நண்பன், வாரக்காரன் என்று பொருள்படும்.

சைவநெறி நான்கு பாதங்களை உடையது. அவை சரியை, கிரியை,யோகம், ஞானம் எனப்படும். யோக நெறியைச் சைவத்தில் தோழமை நெறி என்றும், சகமார்க்கம் என்றும் கூறப்படும். எனவே நேயக்காரன் சகமார்க்கத்தில் தோழனாக வருபவன் ஆவான். சைவத்தில் யோகமார்க்கத்திற்கு உதாரணமாகக் கூறப்படுபவர் சுந்தரமூர்த்திநாயனாராவார். அவரே தனது தேவாரம் ஒன்றில் "தோழனுமாய்" என்று இறைவனைக் குறிப்பிடுவார். யோக மார்க்கத்தை விளக்கும் மிகச் சிறந்த நூல் பதஞ்சலி யோக சூத்திரமாகும்.

**4. பதஞ்சலி யோகம்**

பதஞ்சலி யோகம் அட்டாங்க யோகம் என்றும் அழைக்கப்படும். அட்டாங்கம் என்ற தொடரின் பொருள் எட்டு அங்கம் எனப் பொருள்படும். பதஞ்சலி யோகத்தை இராஜயோகம் என்று கூட அழைப்பர். அது எட்டுப் படிகளை உடையது. அப்படிகளாவன: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன ஆகும். இராஜயோகத்தின் நோக்கம் மூலாதாரத்தில் உறையும் குண்டலினி சக்தியை மேலேயுள்ள சகஸ்ர தளத்திற்குக்கொண்டு வருவதாகும். இராஜயோகத்தில் ஏழு சக்கரங்கள் உடலிலே குறிப்பிடப்படும். அவை யாவன. மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ரதளம் என்பன வாகும். மூலாதாரம் ஆசன வாயிலுக்கும் குறிக்கும் இடையே உள்ளது. சுவாதிஸ்டானம் குறிப்பகுதி ஆகும். மணிபூரகம் நாபியை இடமாகக் கொண்டது. அநாகதம் இருதயஸ்தானம் ஆகும். விசுத்தி கழுத்திலுள்ள தொண்டைப் பகுதியாகும். ஆக்ஞை புருவங்கள் இரண்டுக்கும் இடையே நாசியின் மேல் உள்ளது ஆகும். ஏழாவது தலையிலுள்ள சகஸ்ரதளமாகும்.

இந்த ஏழு ஸ்தானங்களையும் அறிவு வெளிப்பாட்டின் ஏழு படிகள் அல்லது பூமிகள் என்றும் அழைக்கப்படும். அவை பற்றிய விளக்கத்தை இங்கு முதலில் சிறிது விரிவாகப் பார்ப்போம்.

உண்மை எது, பொய் எது, நிரந்தரமானது எது, நிரந்தரமற்றது எது என்று வேறுபடுத்தி அறியும் விவேகப் பயிற்சி செய்யும் ஒருவன் அறியாமையை ஒழித்துக் கொள்கின்றான். அதனால் அவன் அறிவுடையவன் ஆகின்றான். அப்படி அடையப்பட்ட அறிவு படிப்படியாக ஏழு நிலைகளாக உயர்த்திச் சொல்லப் படுகிறது.

மனிதனுக்குள் சுருட்டி வைக்கப்பட்ட குண்டலினி என்ற மகா சக்தி தியானத்தால் அல்லது பிராணாயாமத்தால் தூண்டி எழுப்பப்பட்டுச் சுழுமுனை நாடிக்குள் நுழைந்து மூலாதாரம் முதல் ஒவ்வொரு ஆதாரமாக ஏறி மடல் அவிழ்த்துக் கொண்டு சகஸ்ர தளம் என்னும் உச்சிப்பகுதியை அடையும்வரை ஒவ்வொரு ஆதாரத்திலுமாக ஏற்படும் ஏழு வித அறிவு நிலைகளே இவையாகும்.

ஆன்மிக சாதனையில் ஈடுபட்டு உயர் நிலையை அடையச்சிலர் மிக விரைவாகவும், வேறு சிலர் நடுத்தரமாகவும், இன்னும் சிலர் மிக விரைவாகவும் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர். அதற்கேற்ப அவர்கள் ஒரு பிறவியிலோ, கோடானுகோடி பிறவிகளிலோ உயர்நிலை முத்தியைப் பெறுகிறார்கள். அதற் கேற்பவே அவர்களது ஏழு படித்தர அறிவு நிலைகளும் வேகமாகவோ, மெதுவாகவோ கிட்டுகிறது.

புலன் அநுபவங்களில் திருப்தியில்லாமல் அதன் மேலும் ஏதோ அறிவு உண்டல்லவா என்ற அறிவு முதலாவது படியில் வெளிப்படுகிறது.

அவன் இரண்டாவது படியில் தூலமான விருப்பங்களை விடுத்துச் சூக்கும விருப்பங்களில் ஈடுபடும் அறிவைப் பெறுகின்றான்.

மூன்றாவது படியில் எல்லாவற்றைப் பற்றியும் ஓர் அறிவு கிடைக்கிறது. அதனால் மனம் ஆனந்தத்தை உணர்கிறது.

நான்காவது படியில் உலகம் முழுவதிலும் எதிர் பார்ப்பு இல்லாமல் அன்புகாட்டும் அறிவு கிடைக்கிறது. இந்நிலைக்கு வந்த சாதகன் மீண்டும் கீழ் நிலைகளுக்குச் செல்லாது இயல்பாகவே மேல் நிலைக்குச் செல்லக்கூடிய தன்மையைப் பெறுகின்றான். நான்காவது படிக்கு வந்தவனை மக்கள் பெரிய யோகியாகக்கருதுவர்.

ஐந்தாவது படியில் சுக - துக்கம் முதலான மயக்கங்கள் அற்று அறிவு ஏகாக்ரம் அடைகிறது.

ஆறாவது நிலையில் சாதகன் சாட்சி பூர்வமாக எதிலும் தொடர்பின்றி உலகைப் பார்க்கக்கூடிய அறிவு பெறுகிறான்.

ஏழாவதுபடியில் பூரண அமைதியில் தன்னில் தானாக அமிழ்ந்திருக்கின்றான். உடனே மனமோ, புத்தியோ இல்லாதவன் ஆகிறான்.

மேற்கூறிய ஏழு படிநிலைகளிலும் உள்ள அறிவில் இறைவன் தொடர்புபடுத்தப்படுவதில்லை. அதற்குக் காரணம் யோக அமைப்பு முறையில் இறைவனுக்கு அன்றிப் புருஷனுக்கே முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது.

இறைவன் ஒவ்வொருபடி அறிவிலும் நேயக் காரனாக இருந்து வருவதை யோகமதத்தினர் அறிய முடியாதவர்களாக இருக்கின்றனர் என்று சைவம் கூறுகிறது.

ஆனால் யோக மதம் கூறும் விடயங்களோடு இறைவனைத் தொடர்புபடுத்தி அமைத்துக் கொண்ட விடயமே சைவ சித்தாந்தம் கூறும் யோக மார்க்க மாகும். சைவ சித்தாந்தத்திலும் எட்டு அங்கங்களும் எடுத்தாளப்படுவதைக் காணலாம்.

சைவசித்தாந்தம் கூறும் யோக மார்க்கத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்: சிவயோக சாதனையை விளக்கும் வகையால் சாதகர்கள் அகமுயற்சியாகவே தம்மில் முயன்று சிவனோடு ஒன்று பட வைப்பது யோக மார்க்கமாகும்.

யோக மதத்தவர்களின் முத்தியினைச் சைவசித்தாந்திகள் விமர்சிக்கும் வகையினைப் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் வார்த்தைகளில் மேல்வருமாறு கூறலாம்.

"யோக மதத்தார் தன்னிழல் தன்காலடியில் ஒடுங்குதல் போலத் தனது கரணங்கள் தன்னிடத்தில் ஒடுங்குதலே முத்தி என்பர். அவ்வாறாயின் கரணங்கள் விரியாது ஒடுங்கிக் கிடக்கப்பெறும் நிலையினராய் மூர்ச்சித்துக் கிடப்பவர், வாயுதம்பம் பண்ணிக் கொண்டு இருப்பவர், விஷமேறிச் செயலிழந்திருப்பவர் எல்லோரும் முத்தி அடைந்தவராதல் வேண்டும்! இவர்கள் கருத்து இது, ஆதலால் மேலும் ஆராய்ச்சிக்கு இடமில்லை."

சைவத்திலும் சரி, யோக மதத்திலும் சரி முடிமேலே அஞ்சலி செய்வதன் நோக்கம் உடற்சிறையில் அகப்பட்டு இருக்கும்போதுள்ள குறுகிய அறிவை விடுத்து அச்சிறையில் நின்றும் நீங்கி அகண்ட அறிவைப் பெறுவதாகும். எனவே யோக சூத்திரத்தில் உடலுக்கு வெளியே தியானம் செய்வதையும் அதன் பயனையும் முடிமேலே அஞ்சலி செய்வதோடு ஒப்பிட்டு நோக்குவது பயனுள்ள விடயம் ஆகும். அதற்கு யோக சூத்திரத்தின் மூன்றாவது பகுதியான விபூதி பாதத்தின் நாற்பத்து மூன்றாவது சூத்திரத்தை அவதானிக்கவேண்டும்.

**5. விபூதி பாதத்தின் நாற்பத்து மூன்றாவது சூத்திரம்**

நாம் எமது உடலையே நாம் என்று அறிவதால் உடலுக்கு உள்ளேயே மனம் அடைபடுகின்றது. அதனால் அறிவு இருள் மயமானதாகத் தெளி வில்லாமல் மறைப்பு உடையது ஆகவே இருக்கின்றது. உடலுக்கு வெளியே சம்யமம் செய்து அந்த மறைப்பை நீக்கிப் பூரண அறிவைப் பெறமுடியும். இங்கு சம்யமம் என்பது அட்டாங்க யோகத்தின் இறுதி மூன்று அங்கங்களான தாரணை, தியானம், சமாதி என்ற மூன்றையும் சாதகன் ஒரேசமயம் பயிற்சி செய்வதைக் குறிக்கும்.

விபூதிபாதத்தின் 43ஆவது சூத்திரத்தின் பொருளையும், அதற்கான விளக்கத்தையும் ஸ்வாமி என்பவர் கூறுகின்றபடி இனி அவதானிப்போம்.

"உடலுக்கு வெளியே தன்னையும், கற்பனையில்லாத விருத்தியையும் சம்யமம் செய்வதன் மூலம் உடலை விட்ட சிறந்தவர்களாக ஞான மறைப்பு நீங்கியவர்கள் புகழப்படுகின்றார்கள்" என்பது அச்சூத்திரத்தின் பொருளாகும்.

ஸ்வாமி இதற்குக் கொடுக்கும் விளக்கம் மேல் வருமாறு:

"நாம் எங்கே போனாலும், இந்தக் குறிப்பிட்ட வடிவமுள்ள உடலுக்குள் அடைந்திருப்பதாகவே உணர்வு எப்போதும் இருக்கின்றது. எங்கும் பரவிய ஞானம் மறைக்கப்பட்டிருப்பதால் வெளியில் பரவியுள்ள சித்தம் உடலுக்குள் மட்டுமே இருந்து இயங்குவதாக நம்பி இருக்கின்றோம். ஆனால், பிரபஞ்சம் முழுவதும் நமது மனம் இருக்கிறது. புருஷர்களான நாம் அணுப்பிரமாணம் ஆனவர்கள். ஆனாலும் உண்மையில் நமக்கு உடம்பு கிடையாது. இதனால் நாம் சுதந்திரமானவர்கள் என்று உணர வேண்டும். நமது எங்கும் பரவிய ஞானத்தை மறைக்கும் மறைப்பு கிலேசம், கர்மாசயம் என்பவையே ஆகும். இவை விலகினால்தான் ஒளிவடிவமான சத்துவ புத்தியை வெளிப்படச்செய்ய முடியும்.

உடலுக்கு வெளியேயும் தான் இருப்பதாகச் சம்யமம் செய்து உடலை விட்டவர் என்ற சிறந்த பெயரைப் பெறவேண்டும்.

இந்த உடலை நான் எனக்கருதும் அகங்காரத்தைத் தான் என்று எண்ணும் புருஷனுக்கு உண்டான கற்பனையை விட்டு அகல்பிதமான உண்மை விருத்திகளைச் சம்யமம் செய்து மறைப்பை நசிப்பிக்க வேண்டும்.

நான் புருஷன், எனக்கு உடல் கிடையாது; நான் என் ஞானத்தால் எங்கும் பரவியவன்; நான் உடலை விட்டுப் பழைய நிலையை அடைய வேண்டும் என்பவை உண்மை விருத்திகளாகும்."

இதே விடயத்தையே மணிவாசகர் "சிரங்குவிவார்" என்றும் அருணகிரியார் "முடிமேலே அஞ்சலி செய்வார்கள்" என்றும் கூறினர்.

ஆனால் சரியை, கிரியை, யோகம் என்ற மார்க்கங்கள் பத முத்தியையே அன்றிப் பரமுத்தியைத் தருவதில்லை என எல்லாச் சைவ நூல்களும் அறுதியிட்டுக் கூறுகின்றன. அவற்றில் பெறும் அறிவு பாச அறிவும், பசு அறிவுமே ஆகும். அல்லது இராஜ யோகம் கூறும் ஏழு படிநிலை அறிவுகளும் பாச ஞானமும் பசு ஞானமுமே ஆகும். எனவே நேயக்காரன் என்ற தோழன் ஆன்மாவுடன் எப்போதும் ஒன்றாய் உடனாய், வேறாய் இருந்தபோதும் ஞானம் பெறும் வரை அதாவது பதிஞானம் பெறும் வரை மறைவாகவே இருந்து கொள்கின்றான்.

இறைவன் அவ்வாறு ஆன்மாவை முன்விட்டுத் தான் மறைந்திருப்பதை இருபா இருபஃது என்ற அருணந்தி சிவாச்சாரியாரின் நூல் மேல் வருமாறு விபரிக்கின்றது.

"என்னுட் கரந்து என் பின்வந்தருளி
என்னையும் தன்னையும் அறிவின்றியற்றி
என்னது யானெனும் அகந்தையும் கண்டு
யாவயின் யாவையும் யாங்கணும் சென்று
புக்குழிப்புக்குப் பெயர்த்துழிப்பெயர்ந்து
மிக்கபோகம் விதியால் விளைத்திட்டு
எற்பணி யாளாய் எனைப் பிரியாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு
என்வழி நின்றனன் எந்தை அன்னோ."

இப்பாடலின் பொருளைப் பின்வருமாறு சுருக்கித்தரலாம்: "இறைவன் என்னுள்ளே புகுந்து நான் உணரா வண்ணம் மறைந்து நின்று கொண்டான். யானெடுக்கும் யோனி பேதங்களிலெல்லாம் என்னையும் ஒரு ஆளாக்க வேண்டும் எனக் கொண்டு நிழல் போலச் செல்லுமிடமெல்லாம் என்னைத் தொடர்ந்து வருகின்றான். எனக்கு வேண்டும் நுகர்வு இன்பப் பொருள்களான தனு, கரண, புவன, போகங்களையெல்லாம் நிறைவுறத் தந்து அருளுகின்றான். இத்துணை செய்யும் இறைவன் அவன் நினைப்பே இல்லாது போகவும் என்னிடம் உள்ள அறியாமையால் நான்யார், என் உள்ளம் ஆர் என்கின்ற சிந்தனையும், எனக்கு மேலான ஒரு முதல்வன் உளன், அவன் என்னை இங்கு இயக்குகின்றான் என்னும் அறிவு கைவரப் பெறாதவனாகி நிற்கின்றேன். அப்போதும் இறைவன் என்னோடு ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று என்னை இயக்குகின்றான். இது என்னுடையது, இதை நானே செய்தேன் என எண்ணும் ஆணவ முனைப்புகள் என்னிடத்தே எழுந்து நிற்பதையும், அறிவின்மையாகிய அத்தன்மையையும் இறைவன் கண்டு கொண்டார். மல முனைப்புகளின் காரணமாக நல்வினை, தீவினைகளைப் புரிகின்றேன். அந்நல்வினை, தீவினைக்கேற்ப உயர்திணை, அஃறிணைப் பொருள்களாகவும், பூதாசார சரீரம், பூத சரீரம் எனப்படும் பல்வகை உடல்களை எல்லாம் யான் எடுத்து நிற்கும் வேளையிலும் அந்தந்த இடங்களில் எல்லாம் என்னைத் தொடர்ந்து வருகின்றாய் அன்றோ. இவ்வாறான பிறவிகளை எல்லாம் யான் எடுத்துச் செல்லும் இடமெல்லாம் என்னுடனே நீயும் ஒன்றாய் வருகின்றாய். அவற்றை விட்டு நீங்கி மற்றோர் இடம் போவதற்குப் பெயரும் போதும் என்னுடன் பெயர்கின்றாய். தனு, கரண, புவன, போகம் என்பவற்றால் வினை காரணமாக வரும் நுகர்ச்சிகளை எல்லாம் முறைப்படி யான் அனுபவிக்கும்படி பொருத்தியும் அருளியும் வருகின்றீர். என் பின் வந்து அருளி, புகுந்துழிப் புகுந்து, பெயர்ந்துழிப் பெயர்ந்து ஒரு ஏவலாளரைப்போல என் பணிகளை எல்லாம் செய்கின்றாய். அப்பணியாளன் தானும் தனது எசமானனென்றும் பிரித்தறியமுடியாத தன்மைபோல அடியேனையும் ஒரு

பொருட்டாக மதித்து என்னை என்றும் விட்டுப் பிரியாமல் இருக்கின்றாய். உனக்கு விரும்பிய வழியெல்லாம் ஓடித்திரிந்து திரும்புக, திருந்துக என்று எனது செயற்பாடுகளை எல்லாம் ஒன்றித்து நின்று என்வழியிலேயே என்னைச் செல்ல விட்டு விடுகின்றாய். என்வழி செல்லும் போது என்னைத் தொடர்கின்ற தலைவன் ஆக நீர் திகழ்கின்றீர். என் தந்தையே இது ஒரு வியப்பாகின்றது."

சைவ சித்தாந்தப்படி பர முத்திபெறப் பாச, பசு ஞானங்கள் அன்றி பதிஞானம் கைவரப்பெற்றிருக்க வேண்டும். நேயக்காரன் தோழனாக யோக நெறியில் மட்டுமன்றி ஞான நெறியிலும் கூட இருக்கின்றான். சரியை, கிரியை, யோகத்தாலே அவனை அறிய முடியாது. இதனை அருணகிரிநாத சுவாமிகளின் கதிர்காமத் திருப்புகழ் ஒன்றில் அவர் அழகாகச் சித்தரித் துள்ளமையை இங்கு காண்போம்.

"சரியை யாளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகல யோகர்க்குமெட் டரிதாய
சமய பேதத்தினுக் கணுகொணா மெய்ப்பொருட்
தரு பராசத்தியிற் பரமான
துரிய மேலற்புதப் பரம ஞானத்தனிச்
சுடர் வியாபித்தநற் பதிநீடு
துகளில் சாயுச்சியக் கதியையீ றற்ற சொற்
சுகசொரூபத்தையுற் றடைவேனோ."

இறைவன் இவ்வாறு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிகளிலும் ஆன்மாவின் நேயக் காரனாக இருந்து வந்தாலும் பதிஞானம் பெற்றபின்பே அவன் என்றும் நேயக்காரனாக இருந்து வருவது புலனாகும்.

### 6. நெஞ்சிலா தலைக்குமேலா?

பல பெரியோர்கள் இதயத்திலேயே தியானம் செய்வதைத் தமது சீடர்களுக்கு உபதேசித்துள்ளனர். இதுதொடர்பாக சாரதாதேவி அம்மையாருக்கும் சுவாமி விரஜானந்தருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் இங்கு நினைவு கூரத்தக்கது.

விரஜானந்தருக்குப் பேலூர் மடத்திலிருந்து ஜெயராம் பாடிக்குச் சென்று அன்னையைக் காண வேண்டும்போல் தோன்றியது. ஐந்து வருடங்களுக்குப் பின் தன்னிடம் வந்திருந்த விரஜானந்தரைப் பார்த்த போது அவர் எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தார். அதற்கான காரணம் என்ன என்பதையும் அன்னை சாரதா தேவி உணர்ந்து கொண்டார்.

"மகனே நீ உன் மனத்தை எங்கே ஒருமைப்படுத்து கிறாய்? தலையிலா இதயத்திலா?" என்று விரஜானந் தரை அன்னை கேட்டார். "தலையில்தான், அவ்வாறு செய்வது இதமாக இருக்கிறது" என்று விரஜானந்தர் அன்னைக்குப் பதிலளித்தார்.

"மகனே என்ன காரியம் செய்து விட்டாய். திடீரென்று மனத்தை அவ்வளவு உயரத்திற்குக் கொண்டு போகலாமா? முதலில் தலையில் ஒருமைப் படுத்திவிட்டுப் பிறகு இதயத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்றும், அங்குதான் இஷ்ட தெய்வத்தைத் தியானிக்க வேண்டும் என்றும் அவருக்குப் புத்திமதி கூறினார் அன்னை.

அன்னை விரஜானந்தரிடம் திடீரென்று மனத்தை அவ்வாறு உயரத்திற்குக் கொண்டுபோகலாமா என்று கேட்ட கேள்வியிலிருந்து அநுபவம் உள்ள சாதகருக்கு உயர்ந்த தியான ஸ்தானம் தலையிலேதான் என்பதை உணரமுடிகின்றது. இந்த உயர் சாதனை பற்றித் திரு வாசகம் கூறும் ஒரு பாடல் பகுதியை இங்கு காணலாம்.

### 7. திருவாசகம்

திருவாசகத்தில் ஆரம்பத்திலே குறிப்பிட்டது போல தலைக்குமேல் தியானிப்பதைப் பல இடங்களில் காணலாம். சிறப்பாகச் சென்னிப்பத்தில் விபரமாகக் காணலாம். இவ்விடத்தில் நீத்தல் விண்ணப்பத்தில் இருந்து ஒரு பாடலின் பகுதியில் இத்தியானம் கூறப்பட்டிருப்பதைக் காண்போம்.

"பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்றாக்கையைப்
போக்கப்பெற்று
மெலிகின்ற என்னை விடுதிகண்டாய்"

என்பது அப்பாடற் பகுதியாகும். "பொலிகின்ற நின்தாள் புகுதப்பெற்று" என்ற பகுதி தலைக்குமேலே உள்ளது திருவடி என்பதனையும், அதற்குள் புகுந்த ததையும் குறிப்பிடப்படுகின்றது. அதற்கு அடுத்ததாக அப்படியான தியானத்தால் "ஆக்கையைப் போக்கப் பெற்று" உடல் இருக்கும் நினைவு இல்லாத நிலை குறிப்பிடப்படுகின்றது. இப்படித் தியானத்தில் இருந் தால் அந்த உடல் "மெலிகின்றது" என்ற விடயம் விளக்கப்படுகிறது. எனவே திருவாசகத்தின் இப்பாடல் பகுதி முடிமீது அஞ்சலி செய்வதை மிக உயர்ந்த சாதனையாகக் காட்டி அதே திருவடியில் திழைத் திருப்பதாக உணர்த்தப்படுகிறது. உடம்பு போனபின் அது மெலிந்தது என்பதன் உட்பொருள் திருவடித் தியானத்தில் நிற்க உடல் நினைவு இல்லாமல் போவதனால் காலம் செல்லச் செல்ல அது மெலியு

மன்றி முற்றாக இல்லாமல் போகாது என்பதைத் தெளியலாம்.

**8. நிறைவுரை**

எனவே "முடிமேலே அஞ்சலி செய்வார்கள் நேயக்காரர" என்ற தொடரினால் அருணகிரிநாத சுவாமிகள் தலைக்குமேலே சிந்தனையை வைத்துத் தியானம் செய்து நாதநிலையில் திளைத்திருப்பவர்களின் அன்பன் முருகப்பெருமான் என்று கூறுவதைக் காணலாம். "நாகம் அணிகின்ற நாதநிலை கண்டு நாடி அதில் நின்று தொழுவேனே" என்ற அருணகிரிநாத சுவாமி களின் மற்றோர் திருப்புகழ் அடியும் இதே கருத்தையே வேறு வார்த்தைகளினால் கூறுகின்றது.

நேயக்காரன் என்ற தொடருக்குத் தோழமை உடையவன் என்ற கருத்தில் யோக வழிக்கு இங்கே அதிக இடம் கொடுத்துச் சிந்திக்கப்பட்டது. ஆனாலும் சரியை, கிரியை நெறிகளைப் போலன்றி யோக நெறியைத் தகுந்த ஒரு குருவின் துணைகொண்டே பயிற்சி செய்வது மிகப் பாதுகாப்பானது. எனினும் யோக ஞான நெறி விடயங்களைத் தெரிந்து கொள்வது சரியை, கிரியை நெறியிலேயே நெடுக நின்றுவிடாது விரைவில் பிறப்பறுக்க வேண்டும் என்ற வேட்கையைத் தரும். அதனால் குருவின்றித் தனது எண்ணப்படி யோகமார்க்கத்தில் ஈடுபடுவது ஆபத்தானது என்ற எச்சரிக்கையை மறந்து விடக்கூடாது.

யோக மார்க்கத்தில் குருவின்றி ஈடுபட்டு உடல், உளப் பிரச்சினைகள் வந்தால் அவற்றை மருந்துகளால் குணமடையச் செய்யமுடியாது என்பதையும் மருத்துவ உலகம் கண்டுகொண்டது. எனவே தகுந்த குருவின் கண்காணிப்பின் கீழேயே யோக சாதனை மேற்கொள்ளப்படவேண்டும். அப்போது தான் நேயக்காரனும் நேயக்காரனாக வருவான். அத்தோடு சிரமங்கள் இன்றி முடிமேலே அஞ்சலி செய்யவும் கூடும்.

---

## தலையில் உள்ள ஓஜஸ் அளவுக்கேற்பவே ஆன்மிக வலிமை

யோகிக்கு மாத்திரமே சுழுமுனை திறக்கப்பட்டு இருக்கின்றது. சுழுமுனை நாடி திறந்து மேல் எழுமாயின், நாம் புலன்களுக்கு அப்பாற் செல்லுவோம். மனமானது புலன்களுக்கும் உணர்வுக்கும் அப்பாலாகி நிற்கும்; புத்திக்கும் அப்பாலாகும். தருக்க அறிவு அவ்விடத்தை அடையமாட்டாது. சுழுமுனையைத் திறக்கச் செய்வதுதான் யோகியினுடைய முதற்கொள்கை. யோகி சொல்லுகிறபடி, சுழுமுனை மார்க்கத்திலே இந்தத் தாமரைகள் அமைந்திருக்கின்றன. முள்ளந்தண்டுக் கொடியின் அடியிலே அமைந்திருப்பது மூலாதாரம் எனப்படும்; அதற்கு மேலாகவிருப்பது சுவாதிஷ்டானம்; மூன்றாவது மணிபூரகம்; நான்காவது அநாகதம்; ஐந்தாவது விசுத்தி; ஆறாவது ஆஞ்ஞை; மூளையிலுள்ள ஏழாவது ஆயிரமிதழ்த் தாமரையாகிய சகஸ்ராரம். இவற்றிலே இப் பொழுது கீழேயுள்ள மூலாதாரத்தைப்பற்றியும், மிகவுயர்ந்த சகஸ்தாரத்தைப் பற்றியும் நாம் கருதவேண்டும். மூலாதாரத்திலிருந்து வலிமையை எடுத்துச் சகஸ்ராரத்துக்குக் கொண்டு வரவேண்டும். மனித உடலிலுள்ள எல்லா வலிமைகளுள்ளும் 'ஓஜஸ்' எனப்படுவது மிகவுயர்ந்ததென யோகிகள் கூறுகிறார்கள். இந்த ஓஜஸ் மூளையிலே சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனுடைய தலையிலே எவ்வளவு ஓஜஸ் கூடியிருக்கிறதோ, அவ்வளவுக்கு அவன் வலிமை படைத்தவனாயும், அறிவு உள்ளவனாயும், ஆன்மிக வலிமை சான்றவனாயும் இருப்பான். ஒரு மனிதன், அழகிய மொழியிலே அழகிய எண்ணங்களை வெளியிட்டாலும், மற்றையோருடைய மனத்திலே அழுத்தமுண்டாகும்படி பேசமாட்டாதவனாயிருக்கிறான். மற்றொருவன், அழகிய மொழி கருத்து என்னும் இவை இல்லாதிருப்பினும், அவனுடைய மொழிகள் கேட்போரைக் கவர்கின்றன. அவனுடைய இயக்கம் வலிமையோடு கூடியிருக்கிறது. இது ஓஜஸினால் ஆகிய வலிமை.

– சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம்.



சிவதொண்டன்

துர்முகி ஸ்ரீ ஆடி - ஆவணி (2016) இதழ் (07-08)

# நல்லூரான் திருவடி

நல்லூர்க் குபேரவாயிற் கோபுர வழியாக நுழைந்து நந்தவனத்தினூடாகச் செல்லும் போது திருவடி தரிசனம் கிட்டும். தடாகக் கரையில் தென்திசை நோக்கித் திருவடி வீற்றிருக்கிறது. திருவிளக்கெரிய மலர் சூடித் திகழ்கிறது. அயலில் உள்ள இரு நீண்டு வளர்ந்த நாகமரங்களின் நாகலிங்கப் பூக்களது நறுமணம் அந்த மணம் நாறும் சீறடிக்கு இயைந்திருக்கிறது. நந்தவனத்திலே திருவடி வெளியாகவே இருக்கிறது. ஆயினும் மண்போட்டால் மண் விழாதபடி மனிதரெல்லாம் கூடும் விழாக்காலத்திலும் கூட இத்திருவடியின் முன் மனிதர் கூட்டம் நெருக்கமாய்க் கூடுவதில்லை. எப்போதும் திரு வடியைக் கிட்டி நின்று நேர் நேராகத் தரிசிக்கலாம். திருவளர் நல்லூரின் அகத்தும் புறத்தும் பிரகாசிக்கும் அருட்சோதியின் சூட்சி இத்திருவடியிடத்தே தான் உளது. இந்த மகத்துவம் மகான்களுக்கு நன்கு தெரிந்தது. ஆதலாற் சுவாமிகள்

"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவு பகல் காணேனடி"

என்றும்

செழுமலர்த் திருவடி தரிசிக்கலாம்
வாராய் தீய மனமே (செழுமலர்த்)

என்றும்

"தேங்காய் இளநீர் தீங்கனி கொண்டு
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு
ஐம்புலன் அடங்கி நின்றவ ருண்டு"

என்றும் இப்படிப் பலவாறாக நல்லூர்த் திருவடியைப் போற்றுகின்றார்.

நாம் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும் நல்லூரான் திருவடி வடிவத்தை நம் கண்களால் தரிசிக்கலாம். ஆனால் அந்த மாணடியின் மாண்பினை நம் கண்களாற் காண முடியாது. அது கண்ணுக்குக் கண்ணால் காண வேண்டியது. அவ்வருட்பதம் தன் இயல்பான அருட்பெருக்கால் தன்னைக் காட்டக் காணவேண்டியது.

சுவாமிகள் அருட்பதத்தினது அருட்கொடையால் அந்தமாணடியின் மாட்சிமையை உணர்ந்து அனுபவித்தார். அந்த மாட்சிமையைப் பலவாறாகப் பாடிப் பரவியிருக்கிறார். அவற்றுட் சில மேல்வருவன:

சேண் பொலியும் திருவடி
எங்கும் திருவடி
சித்தத்தில் திகழும் திருவடி
காக்கும் திருவடி
அகத்தே பூக்கும் திருவடி.

சேண் பொலியும் திருவடி,

"ஊண் பொருளும் ஒழியுமடி - கிளியே
உலகமெல்லாம் அழியுமடி
சேண் பொலியும் திருவடியை - கிளியே
.................................."

சேண் எனும் போது நாம் ஆகாயவெளியை நினைக்கிறோம். ஆனால் இங்கு இடம்பெற்ற சேண் என்பது பூதாகாயத்துக்கும் ஆதாரமான பராகாயத்தைக் குறிக்கின்றது. நாதாந்தவெளி, சிற்பரவெளி என்றெல்லாம் இது கூறப்படுகிறது. இந்த வெறுவெளி மாந்தருலகு, தேவருலகு, உம்பருலகு ஆகிய உலகுக்கெல்லாம் முதலானது. காலமெல்லாம் ஊழிக்காலத்தில் முடிய அந்த உகாந்த காலத்திற்கும் முதலானது. தேசகாலம் யாவும் கடந்த அப்பரவெளியிலே மண்ணும் விண்ணும் இல்லை. உயிர்த் திரளில்லை. இவற்றைப் படைத்துக் காத்து அழிக்கும் மூவரில்லை, தேவரில்லை. இந்த ஏகாந்த மோன வெளியைச் செம் பொன் அம்பலம் என்பர். யாதொன்றுமில்லாத அந்த அம்பலம் செம்மையானது. பொன் போற் சோதிமயமானது. ஆதலால்

செம் பொன் அம்பலம் என வழங்குகிறது. இச் செம் பொன்னம் பலத்திலே திருநடம் புரிகின்றது திருவடி. இச் செம்பொன்னம் பலமே தில்லையம்பலம். இதுவே நல்லூர் வெளி. இந்த நல்லூர் வெளியிலே பொதுநடம் புரியும் திருவடியைச் சுவாமிகள் நல்லூரான் திருவடி என்கின்றார். ஆதலால் தான்

"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவுபகல் காணேனடி"

எனப் பாடுகிறார். எல்லாமற்ற இடத்திலல்லவோ எல்லாம் மறக்கலாம். சரணகமல மலர் தலைதனிலே சூடிய இடத்திலல்லவோ இரவுபகலற்ற ஏகாந்த வீட்டிற் பொருந்துதலியலும். இத்தகைய பெரு நிலையை அருளவல்ல மாணடியே நல்லூர்த் தலத்தில் நிலையாய் எழுந்தருளியிருக்கிறது.

**எங்கும் திருவடி**

செம்பொன்னம்பலத்துச் சேண்பொலியும் திருவடி யிடத்திருந்தே மூவரும் தேவரும் முளைத்தனர். உயிர்த்திரள் தோன்றிற்று. உலகம் யாவும் உதித்தன. தன்னிலிருந்து முளைத்த யாவற்றிலும் தானான அத்திருவடி அணுவும் வெற்றிடமின்றி ஒன்றாமல் ஒன்றி நிற்கின்றது. ஆதலினால் அங்கும் இங்கும் எங்கும் திருவடியே செறிந்திருக்கிறது. எங்கும் செறிந்திருக்கும் முருகப் பெருமான் திருத்தாளையே நல்லூரில் வழிபடுமாறு எங்கள் சுவாமிகள் எம்மை வழிப்படுத்து கின்றார்.

"அறிவுக் கறிவாகி அப்பாற்கப் பாலாய்ச்
செறியும் முருகன் திருத்தாள் - நெறியுடனே
பற்றிப் பணிந்திடுவீர் பல்கால் இலங்கையீர்
வெற்றி தருமென்றும் விளைவு."

**சித்தத்தில் திகழும் திருவடி**

சேண் பொலிவதும், எங்கும் செறிவதுமான திருவடி சித்தத்திலும் திகழ்கிறது. சேண் எனப்படும் பரவெளியைப் பராகாயம் என்பர். இப்பராகாயம் நுண்ணிதாய் சித்தத்தும் உளது. சிந்தனையிலுள்ள வெளியைத் தகராகாயம் என்பர். சடத்துவங்கள் யாவும் ஒடுங்கிய இடம் பராகாயம் என்பது போல் வீண் பாவனையான மனநினைவுகள் யாவும் ஒடுங்கி மனமிறந்த இடம் தகராகாயம். பராகாயத்தில் ஆடுவது போன்றே இதயவெளியிலும் பொதுநடம் புரிகிறது திருவடி. வீண் பாவனைகளையெல்லாம் விட்ட இடம் நல்லூர் என்றும், காண்பான, காட்சி, காட்சிப்பொருள் எனும் மூன்றாகக் காணும் ஞாதுரு ஞானம் ஒழிந்து ஒன்றாகக் காணும் மெய்ஞ் ஞானக் காட்சி வாய்ந்த இடம் வடிவேல் என்றும், உலகமெல்லாம் ஒழிந்த ஏகாந்த மோனம் திருவடி யெனவும் சுவாமிகள் நல்லூர்க் கிளிக் கண்ணியிலே பாடுவார்.

"ஆன்மா ஒருபோதும் - கிளியே
அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிடடி - கிளியே
விளங்கு நல்லூர் தெரியுதடி 1

காண்பானும் காட்சியும் போய் - கிளியே
கண்டபல பொருளும் விட்டு
மாண்பாகச் சிந்தையிலே - கிளியே
மலரடியைப் போற்றிடடி. 2

ஊண் பொருளும் ஒழியுமடி - கிளியே
உலகமெலாம் அழியுமடி
சேண்பொலியும் திருவடியைக் - கிளியே
சிந்தையிலே போற்றிடடி 3.

**காக்கும் திருவடி**

காமமுத லாறுங் கடிந்து கடிகமழுஞ்
சேமம் தருந்திவ்ய பாதத்தை - ஆமளவும்
போற்றிப் புகழுவீர் பொன்னிலங்கை நன்னாட்டீர்
மாற்றிப் பிறக்க மருந்து.

நல்லூரான் திருப்பாதம் செம்பொன்னம்பலத்து ஆடியும் அங்கும் இங்கும் எங்கும் செறிந்தும், சித்தத்துள் திகழ்ந்தும் நமக்குச் சேமம் தருகிறது. நல்லூர் திருப்பாதம் தரும் இச்சேமத்தை

தேவர் சிறை மீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே
கவலை யெல்லாம் போகுமெடி

கர்த்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடெடி

என்றெல்லாம் சுவாமிகள் பாடுகின்றார்.

மேலும்
"நல்லூரான் திருப்பாதம் காப்பு அடடா
நமக்குக் குறையில்லை நல்ல வாக்கு"
என்றவாறு பல இடத்தும் பாடுகிறார்.

# நற்சிந்தனை

உ

## நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நானினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே
இரவுபகல் காணேனெடி 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி - கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே!
கவலையெல்லாம் போகுமெடி 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி 4

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி 5

பரிதிகாயில் வாடாது
பவனம்வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதெடி - கிளியே!
படைகள் மோதில் மாயாதெடி. 6

அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தை தந்த செல்வனெடி - கிளியே!
சீரார்நல்லூ ராசானெடி 7

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி - கிளியே
விளங்குநல்லூர் வாசனெடி 8

சாதனை செய்த பேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி - கிளியே!
கலங்காத வீரனெடி 9

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே
பொல்லாங்கு தீருமெடி 10

ஆதலால் கவலையெல்லாம் தீர்க்குமாறு வேண்டி நல்லூரான் திருவடியை மனதுருகிப் பாடுதலே நமக்குச் சேமநந்நிதியாகும். இவ்வாறு போற்றிப் பரவி வழி பட்டால் அப்பெருமான் மாமயிலேறி வந்து வரம் தந்து நேசமுடன் காப்பார்.

"பாராயோ என்னைநீ பார்த்துக் கவலையெல்லாந்
தீராயோ செய்யதிரு வேலா - வராயோ
மாமயிலேறி மகிழ்ந்து வரந்தந்து
சேமமுடன் காப்பாய் சிறப்பு.

**மனத்தே பூக்கும் திருவடி**

காக்குந் திருவடிகள் எந்நாளும் என்மனத்தில்
பூக்கும் பொறிவழியே போகாமல் - நோக்குமென்றும்
தேக்கும் சிவானந்தத் தேனமுதை உண்டு மனம்
நீக்கமின்றி நிற்கும் நினை.

காக்கும் திருவடிகள் கரைகாணாக் கருணைக் கடலாகத் தன் காக்கும் சேவகத்தைப் புரிகிறது. அது சூர்ப்பகை தடிந்து தேவர்சிறை மீட்டு குன்றும் குன்றும் சென்று எங்கும் மலரடி படுமாறு போரிட்டது. நமது நெஞ்சக் கனகல்லிலும் அம்மலர்பதம் மலர்ந்து நின்று காக்கின்றது. அது எந்நாளும் மலர்ந்து மனத்தைப் பொறிவழியிலே போய்ப் புகுந்து இடர்பட்டுக் கிடவாதவாறு காக்கின்றது. புலன்வழியிலே சென்று அனுபவிக்கும் தினையளவு இன்பத்தை நாடாதிருத்தற்பொருட்டு சிவானந்தத் தேனை வாரி வழங்குகிறது. இத்தகைய நல்லூரான் திருவடியையே நினைத்துப் பார்க்குமாறு சுவாமிகள் நமக்குப் பலவாறாகக் கூறியருளுகின்றார்.

இவ்வாறெல்லாம் பலபடக்கூறுவதால் ஆவதென்ன? நல்லூரான் திருவடி வேதாந்த சித்தாந்தம் கற்ற பண்டிதரென்றோ வேடிக்கைக் கதைபேசும் பாமரரென்றோ வேறுபாடு பாராது. அது நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப் போய் நல்ல மனத்தோடு வந்து பயப் பாடுடன் வீழ்ந்து பாதத்தைப் பற்றும் ஏழையடியார் யாவர்க்கும் இரங்கி அருள் செய்யும். அது திருவருள் புரிதற்கென்றே திருவளர் நல்லூரில் மேவியிருக்கின்றது.

பல்லவி

திருவருட் செய லெப்படியோ
சீமானே கோமானே

அநுபல்லவி

திருவளர் நல்லூர் மேவியதேவே செல்லப்பா
-திருவருட்செயல்

சரணம்

வரவர மனதிற் கவலைகள் மிஞ்சி
வலிந்து கவரும் மாய வாழ்வினுக் கஞ்சி
அரகர சிவனே சங்கரா என்று
போற்றினேன் புகழ் சாற்றினேன்.
-திருவருட்செயல்

இரவும் பகலு மிணையடி மறவேன்
இனியடியேன் மண்ணிற் பிறவேன்
பரவும் யோகசுவாமிகட கன்பு
காட்டுமோ வௌளி கூட்டுமோ!
-திருவருட்செயல்

## சந்நிதி அப்பன்

சந்நிதி யப்பனைச் சண்முக நாதனைப்
பன்னிரு கையனைப் பணிவார்க் கிடரிலை

கங்கைச் சடையன் மைந்தனை என்றும்
எங்கை கூப்பி ஏத்திடல் இன்பமே

முன்னிய கருணை முகமா றுடையான்
என்னது நெஞ்சில் என்றும் உளானே

திங்கட் சடையான் சிவகுமா ரன்தனை
பொங்கு தமிழால் போற்றிடல் இன்பமே

பிறவிப் பிணியும் பிறபல பிணிகளும்
குறைந்து போகக் குமரன் அருள்கவே

வேலனைச் சிவனார் பாலனை வேண்டிடில்
ஞால மெங்கும் நமக்குற வாகுமே

வறுமை சிறுமை யாவும் தேயுமே
பொறுமை யுடனே போற்றிடின் புனிதனை

உள்ளத்தி னுள்ளே ஒளிரும் ஒருவனை
கள்ள மனத்தவர் காணவும் மாட்டார்

கும்பிடுவார் மனத்தானைக் கூர்வே லாயுதனை
நம்பின பேர்க்கென்றும் நடுக்க மில்லையே.

— *சிவசிந்தனை*

The
# Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

Volume: 80 (July - August) Issue : 07-08

## NATCHINTHANAI

### GIVE PRAISE TO MURUKAN

O people of the noble land of rich and prosperous Lanka!
Your sins will vanish in this world and all reproach will leave you .
If the holy feet of Him, who has the cock upon His banner',
You contemplate until you die and ever gladly worship.

O people of the worthy 'and of fair and golden Lanka!
Having mastered the six evils - desire and all the rest.
To give all praise and honour to the fragrant holy feet,
That to us grant protection, is the potion for new birth.

O good folk of Lanka! Why think and suffer further
For the insubstantial body, that is transient
As dew-drop on a "blade of grass? While on this earth
Extol with love the holy feet of Him who has six faces.

O people of the great and pleasant land of Lanka!
Convinced that youth is fleeting, clasp the Lancer's holy feet.
Which immortality bestow; for that will everlasting bliss vouchsafe
Know this, and lovingly bow down to them in worship.

O men of Lanka! Attach yourselves by treading virtue's path
To the holy feet of Murukan, who all pervades,
Who is Knowledge of all knowledge and beyond the beyond doth stand.
Repeatedly prostrate to them; then victory will always be your fruit.

O people of the land of honoured Lanka!
Renouncing all desires that in you may arise,
Ever praise the feet of the young and tender child;
Then grace will fall like rain. Know this to be the right and proper time!

# Foundation stones to Happiness and Success

## CHAPTER -5

## EQUAL-MINDEDNESS

### 1. What is equal mindedness?

To be equally-minded is to be peacefully-minded, for a man cannot be said to have arrived at peace who allows his mind to be disturbed and thrown off the balance by occurrences. The man of wisdom is dispassionate, and meets all things with the calmness of a mind in repose and free from prejudice. He is not a partisan, having put away passion, and he is always at peace with himself and the world, not taking sides nor defending himself, but sympathizing with all.

### 2. The Partisan

The partisan is so convinced that his own opinion and his own side is right, and all that goes contrary to them is wrong, that he cannot think there is any good in the other opinion and the other side. He lives in a continual fever of attack and defence, and has no knowledge of the quiet peace of an equal mind.

### 3. The Equal minded man

The equal-minded man watches himself in order to check and overcome even the

# மகிழ்ச்சிக்கும் வெற்றிக்குமான அத்திவாரக் கற்கள்

## அத்தியாயம் - 5

## சம மனநிலை

### 1. சம மனநிலை என்றால் என்ன?

அமைதியான மனத்துடன் இருப்பதே சமமனநிலை ஆகும். ஒருவன் மன அமைதியை இழந்தாலும், நிகழ்கின்ற சம்பவங்களைக் கண்டு நிதானம் தவறினாலும், அவனை அமைதி உள்ளவன் என்று கூற முடியாது. ஞானம் உள்ளவன் உணர்ச்சி வசப்பட மாட்டான். அவன் விருப்பு வெறுப்பு இன்றி மன அமைதியுடன் எல்லாவற்றையும் அவதானிப்பான். அவன் எந்த ஒரு கட்சியை மட்டும் சேர்ந்தவன் அல்லன். அவன் உணர்ச்சிகளில் இருந்தும் விலகிக் கொள்வான். அதனால் அவனால் எப்பொழுதும் அமைதியுடன் இருக்க முடியும். அவன் தன்னுடனோ, உலகத்துடனோ சச்சரவு உடையவன் அல்லன். அவன் அப்படி ஒரு கட்சியில் சேர்ந்து அதனை மட்டும் ஆதரிக்க மாட்டான் . ஆனால், அவன் எல்லோர் மீதும் அனுதாபத்துடன் இருப்பான்.

### 2. ஒரு கட்சியைச் சேர்ந்தவன்

தனது கட்சி மட்டுமே சரி என்று நினைத்துக் கொண்டு அதற்காக விவாதிப்பவன் ஒரு கட்சியைச் சேர்ந்தவன்ஆவான். தனது கருத்துக்கு மாறானவை எல்லாவற்றையும் தவறானவை என்பான். மற்றவர்களது கட்சியிலும் அவர்களது கருத்துக்களிலும் ஏதாவது நியாயம் இருக்கக்கூடும் என்று அவனால் எண்ண முடியாது. அவன் மற்றக்கட்சியினரை எதிர்க்க வேண்டும், அவர்கள் கூறுவதை மறுக்கவேண்டும், அவர்களது வாதங்களிலும் எதிர்ப்புகளிலும் இருந்து தன்னைக் காக்க வேண்டும் என்பவற்றில் முழுக் கவனமாக இருப்பான். அதனால் சம மனநிலையினால் பெறக் கூடிய மன அமைதியைப் பற்றி ஏதும் அறியாதவனாவான்.

### 3. சம மனநிலை உள்ள மனிதன்

தனது மனத்தில் உணர்ச்சி, வெறுப்பு என்பவை சற்றும் ஏற்படாது கவனமாக இருப்பவன் சம மனநிலையில் உள்ள மனிதன் ஆவான். அவை

appearance of passion and prejudice in his mind, and by so doing he develops sympathy for others, and comes to understand their position and particular state of mind; and as he comes to understand others, he perceives the folly of condemning them and opposing himself to them. Thus there grows up in his heart a divine charity which cannot be limited, but which is extended to all things that live and strive and suffer.

## 4. Spritual Blindness

When a man is under the sway of passion and prejudice he is spiritually blind. Seeing nothing but good in his own side, and nothing but evil in the other, he cannot see anything as it really is, not even his own side; and not understanding himself, he cannot understand the hearts of others, and thinks it is right that he should condemn them. Thus there grows up in his heart a dark hatred for those who refuse to see with him and who condemn him in return, he becomes separated from his fellowmen, and confines himself to a narrow torture chamber of his own making.

## 5. The days of equal minded man

Sweet and peaceful are the days of the equal-minded man, fruitful in good, and rich in manifold blessings. Guided by wisdom, he avoids those

ஏற்படக்கூடிய சமயங்களில் அவற்றை அடக்கவும், குறைத்துக் கொள்ளவும், எப்பொழுதும் தயாராக இருப்பான். இதனால் அவன் மற்றவர்கள் மீது எளிதாக அனுதாபங் கொள்ள முடியும். அத்துடன் அவர்களது மனநிலைகளைப் பற்றி அவன் தெரிந்து கொள்ளக் கூடியவனாயும் இருப்பான். அவர்களை அவன் புரிந்து கொண்டு இருப்பதால் அவர்களைக் கண்டிப்பது பெரிய மூடத்தனம் என்பதை அறிவான். அவர்களுக்கு எதிராகத் தன்னை வைத்துக் கொள்வதும் பெரிய அறிவீனம் என்பதை அவன் அறிவான். இந்த வகையிலேயே அவனது இதயத்தில் ஒரு தெய்வீக அருள் வளர்கிறது. அவ்வுணர்வைக் கட்டுப்படுத்த முடியாது. அந்த அருள் உணர்வு வாழ்வன எல்லாவற்றின் மீதும், முயற்சி செய்வன எல்லாவற்றின் மீதும், துன்பப் படுபவை எல்லாவற்றின் மீதும் அவனை அனுதாபம் கொள்ளச் செய்கின்றது.

## 4. ஆன்மீகக் குருட்டுத்தனம்.

உணர்ச்சிகளுக்கும், வெறுப்புகளுக்கும் ஆளானவன் ஆன்மீகக் குருடனாகவே இருப்பான். அவன் தனது கட்சியின் நன்மையையும் மற்றவர்கள் கட்சியின் தீமையையும் அன்றி வேறெவற்றையும் காண முடியாதவனாகிறான். அதனால் ஒவ்வொன்றினதும் உண்மை நிலையை அவனால் பார்க்க முடிவதில்லை. தனது கட்சியின் உண்மை நிலையைக்கூட அவனால் சரியாகப் பார்க்க முடிவதில்லை. இவ்வாறு அவன் தன்னையே புரிந்து கொள்ளாவிடின் எவ்வாறு மற்றவர்களைப் புரிந்து கொள்ள முடியும்? இதனால் அவன் மற்றவர்களைக் கண்டிப்பது சரி என்று கருதுவான். இவ்வாறு அவன் தான் பார்ப்பதுபோலப் பார்க்காதவர்கள் இடத்திலே ஒருவகையான குருட்டு வெறுப்பை உருவாக்குகின்றான். அவன் அதனால் அவர்களைத் தூற்றுகின்றான். அத்துடன் தனது சகோதர மக்களைப் பிரிந்து தன்னைத்தானே சித்திரவதை செய்து கொள்கின்றான்.

## 5. சம மனநிலையுள்ள மனிதனின் நாட்கள்

சம மனநிலையிலுள்ள மனிதனின் நாட்கள் இனிமையானவையாகவும் அமைதியானவையாகவும் அமையும். அந்நாட்கள் நன்மை உடையதாகவும் அருள் வழங்கக்கூடியதாகவும் இருக்கும். அவன் ஞானத்தினால் வழிநடாத்தப்படுவான். அவன் துன்பமும்

pathways which lead down to hatred and sorrow and pain, and takes those which lead up to love and peace and bliss. The occurrences of life do not trouble him, nor does he grieve over those things which are regarded by mankind as grievous, but which must befall all men in the ordinary course of nature. He is neither elated by success nor cast down by failure. He sees the events of his life arrayed in their proper proportions, and can find no room for selfish wishes or vain regrets, for vain anticipations and childish disappointments.

### 6. How to acquire equal mindedness

And how is this equal-mindedness - this blessed state of mind and life - acquired? Only by overcoming one's self, only by purifying one's own heart, for the purification of the heart leads to unbiased comprehension, unbiased comprehension leads to equal-mindedness, and equalmindedness leads to peace. The impure man is swept helplessly away on the waves of passion; the pure man guides himself into the harbour of rest. The fool says, "I have an opinion;" the wise man goes about his business.

வேதனையும் தரும் பாதைகளை நீக்குவான். அதனால் அன்பு, அமைதி, அருள் ஆகியவற்றுக்குச் செல்லும் வழியில் செல்வான். அவனை வாழ்வில் நிகழும் சம்பவங்கள் எதுவும் நிலைகுலைப்பது இல்லை. மற்றவர்கள் துன்பம் தராதவை என்று கருதும் விடயங் களைப்பற்றியும் அவன் கருதமாட்டான். அவ்விடயங் கள் சாதாரண மனித வாழ்வில் எல்லாருக்கும் நிகழ்வன என்று எண்ணுவான். அவன் வெற்றியால் களிப்பதோ தோல்வியால் சோர்ந்து போவதோ இல்லை. சுயநல விருப்பங்கள், வீணான துன்பங்கள், பயனற்ற ஏக்கங்கள், குழந்தைத்தனமான ஏமாற்றங்கள் என்பவற்றுக்கு அவனிடம் சிறிதும் இடம் இருப்பதில்லை.

### 6. சம மனநிலையைப் பெறுவது எப்படி?

எப்படிச் சம மனநிலையைப் பெறுவது? வாழ்வி னதும், மனத்தினதும் அந்தப் பேரின்ப நிலையைப் பெறுவது எப்படி? ஒருவன் தன்னை வெல்லுவதும், தனது உள்ளத்தைத் தூய்மை செய்வதுமே சம மன நிலையைப் பெறுவதற்கான வழியாகும். உள்ளத் தூய்மை ஒரு கட்சியை மட்டும் சாராத அறியும் திறனைத் தருகின்றது. அவ்வாறான அறியும் ஆற்றல் சம மனநிலைக்கு வழி கோலுகின்றது. சம மனநிலை ஒருவருக்கு அமைதியைக் கொண்டுவரும். உள்ளத் தூய்மை இல்லாதவன் உணர்ச்சிகளால் அடித்துச் செல்லப்படுவான். அந்த நிலையில் அவனுக்கு எந்த உதவியும் கிடையாது. உள்ளத் தூய்மை உள்ளவன் எவ்விதக் கஷ்டமும் இல்லாமல் அமைதியைச் சென்று சேருகின்றான். மூடன் தான் ஒரு கருத்தை வைத்திருக் கின்றேன் என்பான். ஆனால் ஞானி தனது சொந்த அலு வலையே கவனமாகச் செய்து கொண்டு இருப்பான்.

**சம மனநிலை யோகம் என்று சொல்லப்படுகிறது**

தராசுமுள் போன்று மனது நடுவுநிலையில் இருப்பதற்கு யோகம் என்று பெயர். மனது நடுவுநிலையில் உறுதி பெறுமளவு அது மேன்மையுறுகிறது. ஓரம் சாரேல் என்பது கோட்பாடு. மனது இப்பக்கம் அப்பக்கம் சாராது இருத்தல் வேண்டும். இனியதைப் பெறுகிற வேளையில் இன்புறவும்; இன்னாததைப் பெறுகின்ற வேளையில் துன்புறவும் செய்கின்றது மனது. இவ்விரண்டும் ஓரம் சார்ந்த நிலைகளாகும். இன்ப துன்பமிரண்டையும் ஒரே பாங்கில் பொருள்படுத்துவது நடுவு நிலை. இதனால் மனத்துக்குத் தெளிவும், உறுதியும் உண்டாகின்றன. தெளிந்து அசையாதிருக்கும் நீரில் பிம்பம் நன்கு புலப்படுகின்றது. தெளிந்து உறுதி பெற்றுள்ள உள்ளத்தில் மெய்ப்பொருள் காட்சி நன்கு புலனாகும். அது நடுவு நிலையினின்று மனது பெறும்மேன்மையாம்

— பகவத்கீதை.

# THE AMRITANUBHAVA

## CHAPTER :6

## Inefficacy of the Word

29. It is futile to light a lamp in order to see the day.

30. The shadow is not there where it does not fall. It is equally not really there where it falls.

31. It is known in the waking state that the dream which was seen was false. So Avidya does not. exist even though it appears to exist.

32. What is gained by storing in a house the ornaments created by the spell of a magician or by plundering a person who is naked?

33. If the person were to eat imaginary dishes for a hundred thousand times, it is nothing more than fasting.

34. The soil on which a mirage does not appear is dry. But is the soil moistened where it appears?

35. If it (Avidya) were real as it seems, men would have been drenched by the rain painted in a picture : fields would have been moistened and tanks filled by it.

36. What necessity would there be to prepare the ink if one were able to write by mixing up darkness?

37. Does not the sky appear as blue to the eyes? (buy it is not really blue). In the same way, you should know that the appearance of Avidya is false.

38. The Avidya itself naturally declares by its very name that it does not exist.

39. And its indefinableness implies its imaginary nature. A vidya proves its own non-existence in this way.

40. If it really exists why does it not tolerate the determination of its nature by thought? The earth apears to be marked if the jar really exists upon it.

41. It is not a right apprehension if it be said that the Atman is revealed after the destruction of Avidya. It is like the knowledge of darkness residing in the sun (that is revealed after its destruction).

42. This Avidya is illusive but it conceals its illusive nature. It proves its own absence.

43. Thus, as it has been shown in various ways, Avidya is by its very nature non-existence. Then whom should the word destroy.

44. The ground only is struck if the shadow is vehemently struck. Nothing but the arm is damaged by slapping the void.

45 - 46. If with a great thrill a person is ready to drink the water of a mirage, or to embrace the sky, or to kiss his reflection, all his efforts become vain. The logic that tries to destroy Avidya is in the same situation.

47. One who yet entertains a desire to destroy this Avidya, may leisurely take off the skin of the sky.

48. Or milk the nipple of a he-goat or perceive by means of the knees, or form a tablet of an evening by drying it.

49. Or by crushing a yawn he may take out the juice from it. and mixing it with indolence. pour it into the throat of a headless body.

உ

சிவமயம்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை 7ம் பதிப்பு | 300.00 |
| 02. | NATCINTHANAI (ENGLISH EDITION) | 400.00 |
| 03. | வள்ளியம்மை திருமணப் படலம் | 150.00 |
| 04. | திருப்புகழ்த் திரட்டு | 400.00 |
| 05. | யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ம் பதிப்பு) | 350.00 |
| 06. | என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள் | 100.00 |
| 07. | நமசிவாய மாலை | 35.00 |
| 08. | தியான காலச் சிந்தனை (புதிய 3ஆம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோக சுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 200.00 |
| 10. | சிவத் தியான மாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய 4ம் பதிப்பு) | 250.00 |
| 14. | KANDHA PURAANAM | 400.00 |
| 15. | YOGASWAMI TREASURED MEMORIES | 300.00 |
| 16. | YOGASWAMI LIFE AND SPIRITUAL GUIDANCE | 500.00 |
| 17. | HOMEAGE TO YOGASWAMY | 10.00 |
| 18. | சண்முக கவசம் | 25.00 |
| 19. | முருகன் திருப்பாடற் திரட்டு | 50.00 |
| 20. | ஈழத்துத் திருப்புகழ் | 50.00 |
| 21. | சர்வஞானோத்திர ஆகம ஞானபாதவசனம் | 50.00 |
| 22. | திருவாசகம் | 220.00 |
| 23. | சிவதொண்டன் – செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு | |
| | ஆண்டுச் சந்தா a) உள்நாடு | 600.00 |
| | b) வெளிநாடு US $ | 30.00 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடங்கள்

திரு.க. சிவராசா,
5/2, விஷ்னு ரவர்
82 W.A சில்வா மாவத்தை,
கொழும்பு – 06
தொ.பேசி : 0112559360

திரு. சி. மணிவாசகன்,
20 A 2/3, ஸ்ரேசன் வீதி,
கொழும்பு –06
(சனிக்கிழமைகளில் மாத்திரம்)
0112594462

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக் கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்ப வேண்டிய பெயரும் விலாசமும்.

Cheques, Drafts and Money Orders should be drawn in favour of Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.


Bilingual Monthly, Registered at the G.O.P. as News Paper.
No. R.B. 782/1961

a) Printer : Harikanan Printers
681, K.K.S.Road,
Jaffna.

b) Publisher : M. Thilakaratnam

c) Published for : Sivathondan Society Ltd.
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
T.P.: 021 - 2222799

Date of Publication : 01.08.2016

Editor : S. Vinasithamby B.A. (Hons)
Sivathondan Nilayam,
Chenkalady.
Tel: 065 - 2240272


If undelivered please return to:
The Manager , "Sivathondan Nilayam"
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.